# உணர்வுகள்

கலைக்கோட்டன்
அ. இருதயநாதன்



வெளியீடு
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

## சமர்ப்பணம்!

ஆழிப்பேரலையால் ஆறு வயதில்
காவு கொள்ளப்பட்ட எமது
அன்பு மகனான காய்த்தனன்
அவர்களுக்கு "உணர்வுகள்"
என்னும் இப் படைப்பினைச்
சமர்ப்பணமாக்குகிறேன்.



# ஆசியுரை

திருவாளர் அழகையா இருதயநாதன் ஆறும் கடலும் ஒன்றெனெக் கலந்து இறாலும், மீனும் துள்ளித் திரியும் எழில்மிகு இயற்கை வளம் சூழ் அழகிய சிற்றூராம் பாலமீன்மடு எனுமூரில் பிறந்து வளர்ந்தவர்.

அமைதியான சூழல் சுற்றாடலில் கற்பனை வளமும், கலை ஆர்வமும் கொண்ட ஊராக பாலமீன்மடு மிளிர்கின்றது. பாரம்பரிய கூத்துக்கலை தலையானதாய் ஒளிர்கின்றது.

கண்ணூடாகவும், காதூடாகவும் ஆடல் கண்டும், பாடல் கேட்டும் தாளத்தை லயித்தும் மகிழ்ந்த இளைஞன், இளமையிலேயே தானும் தோய்ந்து கூத்துக் கலையில் தன்னை வளர்த்துக் கொண்டார் என்றால் அது மிகையாகாது எனலாம்.

பாரம்பரிய மட்டக்களப்பு மண்ணிற்கே உரித்தான கூத்துக் கலையுடன் மேடைநாடகங்கள், கவிதைகளுடாகவும் தன்னை மேம்படுத்திக் கொண்டார்.

இளமையில் கல்வி சிலையில் எழுத்தென்பர் எம் சான்றோர் வாக்குக்கொப்ப இருதயநாதன் தான் சென்ற இடமெல்லாம், பணியாற்றிய ஊரெல்லாம் தனது கலை ஆர்வத்தையும் சுமந்து சென்றார்.

இவரது கலைப்படைப்புக்கள் மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்புப் பட்டணம் இன்னும் ஊருராக அதன் குக்கிராமங்களில் மட்டுமல்ல வானொலி நிகழ்ச்சிகளிலும் தொலைக்காட்சிகளினூடாகவும் பிரபல்யமாயின.

இவர் இளமையிற் கற்ற கலை ஆர்வம் ஓய்வு நிலை அதிபரான பின்னரும் தொடர்கின்றது. மேடை நாடகங்களில் தானே ஒரு நடிகனாகவும் பங்கேற்று பலரின் பாராட்டைப் பெற்றுள்ளார்.

"கலைக்கோயில்" மன்றத்தினர் இயேசுவின் வரலாற்றை "நீ எதிர்கொண்டதேன்" என்னும் நெஞ்சை அள்ளும் இனிய இன்னிசை நாட்டிய நாடகமாக கிழக்கிலும், வடக்கிலும், மலையகத்திலும் அரங்கேற்றினர். இதில் திரு. அ. இருதயநாதன் அவர்கள் பிரதான பாத்திரமேற்று சிறப்பாக நடித்தமைக்காக அவரைப் பாராட்டி கௌரவித்து "கலைக்கோட்டன்" எனும் விருதை அளித்தனர்.

கலைக்கோட்டன் இருதயநாதனின் பெருமைக்குரிய விடயம் தான் பெற்ற கலைத்திறனை இறை ஈந்த கொடை என்ற பெருமையிலும் பணிவுடனுடன் வாழ்வது

இவர் கத்தோலிக்க கிறிஸ்வதர், என்றாலும் இறை தந்ததெல்லாம் நல்லதென்று எண்ணி பிறர்க்கு கொடுத்தறியும் பண்பாளன். ஆகவேதான் சைவப் புராணக் கதைகளைக் கூத்தூடாகவும் நாடகங்களுடாகவும் மேடையேற்றி பல் இன பல் மத ஒற்றுமைக்காக கலைச் செல்வத்தை ஓர் அர்த்தமுள்ள கருவியாகக் கையாள்கின்றார்.

அண்மையில் கலைக்கோட்டனின் படைப்பான "பட்ட மரம் விட்ட துளிர்" என்னும் குறுந்திரைப்படம் சாதனை படைத்து நிற்கின்றது. இலங்கை நாட்டின் முதலாவது புனிதரான ஜோசப்வாஸ் அடிகளாரின் சரிதையே இதுவாகும்.

கலைக்கோட்டன் நாடகங்கள் "உணர்வுகள்"

மனித உணர்வுகளை பல கோணங்களிலும் வெளிக்கொணரும் வகையில் இந்த நாடகங்கள் அமைந்துள்ளன.

இவரது நாடகங்களை நூலாக்கம் செய்து இலக்கிய உலகிற்கு எடுத்தியம்பும் பாரிய பணியினை கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் ஆற்ற முன்வந்துள்ளமை கலைஞர்களை ஊக்குவித்து உரமூட்டும் பணியாக எனக்குப் படுகின்றது. முத்தமிழை முழு மூச்சுடன் பாதுகாத்து வளர்க்கும் அவர்களை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

கலைக்கோட்டன் அவர்களின் பணி சிறக்க கலை என்னும் தெய்வீகக் கொடை ஊடாக இன, மத, ஒற்றுமை என்றும் நல்லிணக்கம் உருவாக இறை ஆசீர் வேண்டியும், அவருக்கு உடல், உள, ஆன்ம பலத்தை வேண்டியும் மன்றாடி நெஞ்சார அவரை வாழ்த்துகின்றேன்.

**இயேசுசபை ஜோண் ஜோசப்மேரி சுவாமிகள்**
மன்றேசா தியான இல்லம்
பிள்ளையாரடி, மட்டக்களப்பு,
இலங்கை. 28.06.2017.

# கிழக்கு மாகாண கௌரவ கல்வி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

உலக மொழிகளில் செம்மொழி என்கின்ற அந்தஸ்தை பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழி இன்று வரை தன் சீரிளமைத் திறன் குன்றா வண்ணம் வளம் பெற்று, செழுமை பெற்று திகழ்கின்றது. ஆதிமொழிகளில் ஒன்றான தமிழ் மொழியும் மற்றும் அதன் பண்பாட்டுப் பாரம்பரியங்களும் கிழக்கு மாகாணத்தில் போற்றி பாதுகாக்கப்படுகின்றது. இத்தகைய காத்திரமான பணியில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பல வீரியமான செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றமை பாராட்டுக்குரியதாகும்.

கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற கலைஞர்களையும், எழுத்தாளர்களையும் கௌரவித்தும் பாராட்டும் வகையிலும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வருடாந்தம் பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய செயற்றிட்டங்களில் ஒன்று தரமான கையெழுத்துப் பிரதிகளை பெற்று நூலுருவாக்கம் செய்யும் செயற்றிட்டமாகும். தமது கையெழுத்துப்பிரதிகளை நூலுருவாக்கம் செய்வதற்கு பொருளாதார ரீதியாக இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்ற கலைஞர்களுக்கு இத்தகைய செயற்றிட்டம் மிகவும் பயனுள்ளதாக விளங்குகின்றது.

இவ்வருடம் அதிகளவான கையெழுத்துப்பிரதிகள் கிடைக்கப் பெற்றதுடன் அவற்றில் இருந்து சிறந்த பல்துறைசார் ஒன்பது நூற்பிரதிகள் தமிழ் மொழியில் நூலாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட இருக்கின்றன. இதே போன்று சிங்கள மொழியிலும் நூலுருவாக்கம் செய்யப்படுகின்றமையும் பாராட்டுக்குரியதாகும். இவ்வாறு நூலுருவாக்கம் செய்யப்படுகின்ற நூற்பிரதிகள் வாசகர்களை சென்றடைவது அவசியமாகும்.

இத்தகைய காத்திரமான செயற்பாட்டினை வருடாந்தம் மிகச்சிறப்பாக செயற்படுத்திவரும் பண்பாட்டலுவல்கள் திணைக்ளத்தின் மாகாணப் பணிப்பாளர், மற்றும் சிறந்த கையெழுத்துப் பிரதிகளை தெரிவு செய்த நடுவர் குழாமினர், நூல்களை படைத்த ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் யாவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிங்காரவேலு தண்டாயுதபாணி,**
அமைச்சர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
கிழக்கு மாகாணம்.

# உள்ளம் எல்லாம் நிறைந்த ஒரு படைப்பாளி பற்றி சிறு பார்வையும் பதிவும்...!

"கலைக்கோட்டன்" பாடுமீன் கலையரங்கில் உச்சரிக்கப்படும் பிரபல்யம் பெற்ற நாமமிது திரு.அழகையா இருதயநாதனுக்குரியது. ஓய்வு பெற்ற ஆசிரியர் அதிபர் சாரண ஆணையாளர், நடிகர், கவிஞர், எழுத்தாளர் எனப்பன்முக ஆளுமை கொண்ட தமிழர், கலாபூசணம் வித்தகர், கலைஞானி இவ்வாறான பல்வேறு விருதுகளையும் வென்ற கலைவாணன்.

பாலமீன்மடு கிராமத்தைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு சந்திரா ஒழுங்கையைப் வதிவிடமாகவும் கொண்டவர். 1975 – 1998 வரை மட்டக்களப்பு புனித மிக்கேல் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். அவரது மாணவர் படையில் நானும் ஒருவன் என்பதைக் குறித்தாக வேண்டும். நான் அவரது வழிகாட்டலில் குருளைச் சாரணன் ஆகவும் தொழில்நுட்பப்பாடம், சித்திரப்பாடங்களைக் கற்ற மாணவனாகவும் உள்ளேன். மேலும் இவர் கஸ்டப்பிரதேசமான மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலும், மட்டக்களப்பு கல்வி வலயத்திலும் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவரது கலைப்பணியில் சைவ புராண நாடகங்களில் பக்த பிரகலதா, கண்ணப்ப நாயனார், சிலம்புச் செல்வி, கழுமரம் வென்ற காவலன் போன்ற நாடகங்களும், வரலாற்று நாடகங்களில் கடலோரக்காரிகை, சமூக நாடகங்களில் தெய்வத்தின் விழியில் நாடகம் குறிப்பாகக் கூறக் கூடியவை.

வடமோடிக் கூத்துக்கள் காலமாற்றத்திற்கு ஏற்ற முறைமையில் சுமார் ஏழிற்கு மேற்பட்ட கூத்துக்களை அரங்கேற்றியுள்ளார். வீர அபிமன்னன், கல்வியின் பெருமை, கிறிஸ்துவின் வருகை, பணம் படுத்தும் பாடு போன்றவை குறிப்பிடலாம். இவரது கிறிஸ்தவ நாடகங்கள், கிறிஸ்துவின் பிறப்பு, சிலுவையே சிகரம், தியாகத்தின் இரவு அறியாமல் செய்கின்றார்கள் போன்ற 12ற்கு மேற்பட்ட நாட்டிய நாடகங்களாகும்.

இவற்றைவிட தொலைக்காட்சி நாடகங்கள், குறுந்திரைப்படங்கள் என்பவற்றை தயாரித்து வழங்கியுள்ளார். "அமேசன் காட்டில் அழகன் பூசாரி" என்னும் சிறுகதைத் தொகுதிக்கு 22.04.2017-ல் கொடகே விருதினைப் பெற்றுக் கொண்டார். இவர் 1970-களில் இருந்து தொடரந்து எதையோ கலைவடிவாக்கும் அபார திறமையினை தன்னகத்தே கொண்ட கலைஞர் இவர்.

இன்று கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினூடாக "உணர்வுகள்" என்னும் தலைப்பில், உணர்வுகள் குருதிகளின் குலம் ஒன்றே, கௌரவம், இரக்கம், கடையாணி என்னும் ஐந்து நாடகங்களை உள்ளடக்கியதான நூலினை சமர்ப்பணம் செய்கின்றார். இம்முயற்சி வெற்றிபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அ. இருதயநாதன்

"கருவி பற்றிய தெளிவுள்ளோர்க்கு காரியசித்தி கூடி வரும் என்பதில் ஐயமில்லை. எனது ஆசான் திரு.இருதயநாதன் ஐயா அவர்களின் பணி தொடர வாழ்த்துக்கள்.

இருதயம் எமது தேசத்தின் விலைமதிக்கமுடியாத ஒரு சொத்து ஆகும்.

**கலாநிதி. எம்.பி.ரவிச்சந்திரா**

SLTES, B.A.(Hons) PGDE, MPhil, PhD ALIC (DIST)

விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய கலாசாலை,

மட்டக்களப்பு.

செயலாளர், மாவட்ட கலாசார அதிகார சபை,

மட்டக்களப்பு.

# அணிந்துரை!

இலக்கியம் என்பது சகல துறைகளையும் உள்ளடக்கிய ஒன்றாகும். இந்த வகையில் இலக்கியம் சாராத எதுவுமே இல்லை எனலாம். தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என முத்தமிழ் என்று குறிப்பிடுகின்றோம்.

நாடக வடிவத்தை ஷேக்ஸ்பியர் ஆங்கில மொழியில் உருவாக்கி மிகவும் புகழ்பெற்றவர். சுவாமி விபுலானந்த அடிகளார் தமிழில் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் சிலவற்றை மொழிபெயர்ப்புச் செய்து வெற்றி கண்டவர்.

இலங்கையின் பல எழுத்தாளர்கள் அவ்வப்போது நாடகங்களை எழுதி நூல் களாக வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த வகையில் நீண்டகாலம் எழுத்தில் பரீட்சயம் மிக்க கலைக்கோட்டன் என்னும் புனைப்பெயரைக் கொண்ட திரு.அ.இருதயநாதன் அவர்கள் "உணர்வுகள்" என்னும் தலைப்பில் ஐந்து நாடகங்களை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு வெளியிடுகின்றார்.

சிறு வயது முதல் கொண்டே நாடகம் எழுதுவதிலும் நடிப்பதிலும் தயாரித்து நெறியாள்கை செய்வதிலும் அதிகம் ஈடுபாடு கொண்ட கலைக்கோட்டன் ஏற்கனவே இலங்கை ரூபவாஹினியின் நாடகங்களை எழுதி ஒளிபரப்புச் செய்ய வழிவகுத்துள்ளார். "ஒரு சின்ன முத்தம்" என்ற தொலைக்காட்சி நாடகம் இவரது திரைக்கதை வசனத்தில் உருவானதாகும்.

இந்த அனுபவத்தின் வெளிப்பாடாக "உணர்வுகள்" என்னும் தலைப்பில் நாடக நூலொன்றை வெளிக்கொண்டு வருகின்றார். ஐந்து நாடகங்கள் இந்நூலில் இடம்பெறுகின்றன. கவிதை, சிறுகதைகளில் கை வைத்தாலும் நாடகமே வாலாயமாக இருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

இவரது ஐந்து நாடகங்களும் சமூக நாடகங்கள்தான். சமூகத்தில் ஏற்படும் சின்னச் சின்னப் பிரச்சினைகளையெல்லாம் நாடக வடிவத்தில் தந்திருக்கின்றார்.

"உணர்வுகள்" நாடகம் ஒரு பாடசாலையை மையமாக வைத்து நடைபெறுகின்றது. ஒரு குடும்பப் பிள்ளைகளின் படிப்பு, தொலைபேசி அழைப்புகள், காதல், சந்தேக நோய்கள், தற்கொலை முயற்சிகள் என்று ஒவ்வொருவர் உணர்வுகளும் முட்டி மோதி இறுதியில் சமூக நிலைமைக்கு வருகின்றது. படிப்பதற்கு சுவாரஸ்யமாக உள்ளது.

அடுத்த நாடகம் "குருதிகளின் குலம் ஒன்றே" தலைப்பைப் பார்த்ததுமே படிப்பவர்களுக்கு ஓரளவு சம்பவம் புரிந்து விடுகிறது. திருமணப் பேச்சுக்கள், மாப்பிள்ளை தேடும் படலம், சாதிப்பிரச்சினை என்றெல்லாம் குமுறல்கள் வந்து தணிகின்றன.

புத்தபகவானின் போதனையின் எதிரொலிப்பும் இடம்பெறும் அருமையான நாடகம்.

"கௌரவம்" இது ஒரு ஏழைக் குடும்பத்தின் கதை. கணவன் குடிகாரன். கூலித்தொழில் பார்ப்பவன். மனைவியும் அக்கம்பக்கத்து வீடுகளுக்குப் போய் வேலை செய்து கொடுத்து குடும்பத்தைக் காப்பாற்றுகின்றாள். மகள் படிப்பில் கெட்டிக்காரப்பிள்ளை. பாடசாலை பரிசளிப்பு விழாவில் அவளுக்கு பரிசுகள் கிடைக்கின்றன. ஒரு குடிப்பழக்கமுள்ளவன் எப்படியிருப்பான்? அவர்கள் வீட்டு நிலைமை எப்படியிருக்கும்? என்பவையெல்லாம் நன்றாக விளக்கமாகப் பார்க்கின்றோம். ஈற்றில் குடிகாரத் தந்தை எப்படி அந்தப் பரிசளிப்பு விழாவில் கௌரவம் பெறுகின்றார் என்பதோடு முடிவடைகின்றது. நெஞ்சைத் தொடும் உருக்கமான நாடகம்.

"இரக்கம்" தனியார் வைத்தியசாலை, போதனா வைத்தியசாலையென்று கதை நகர்கின்றது.

ஒரு சிங்கள டாக்டர் புரியும் சேவை, அவரது குறிக்கோள், எண்ணம், உணர்வுகளெல்லாம் வெளிப்படுகிறது. வடக்கு – கிழக்கு எதிர்கொண்ட பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்படுகின்றது. தனது சிறுநீரக நோய்க்கு வைத்தியம் பார்ப்பதற்காக டாக்டருக்கு 10 ஆயிரம் ரூபாவை சந்தோசமாகக் கொடுப்பவரிடம் அதை வேண்டாம் என்று மறுத்து திருப்பிக் கொடுப்பதையும் காட்டும் அருமையான நாடகம்.

இறுதியாக "கடையாணி" நாடகம்.

கஸ்டப்பிரதேசப் பாடசாலையை மையமாக வைத்து நாடகம் நிற்கின்றது. போக்குவரத்தின்மை அதனால் உண்டாகும் சிக்கல்கள், உதவி செய்யப்போய் உபத்திரவம் உண்டாதல், பகிரங்கமாக ஆண் - பெண் இருவரையும் சேர்த்து சுவரில் எழுதுதல், பின்னர் எழுதியவரைக் கண்டறிதல் இவ்வாறு கிராமியச் சூழலில் இடம்பெறுகின்ற உணர்வு வெளிப்பாடுகளை இந்நாடகம் கூறுகின்றது.

இப்படி ஒவ்வொரு நாடகமும் சமுதாயத்தில் அன்றாடம் நாம் பார்க்கின்ற, கேட்கின்ற நிகழ்வுகளையெல்லாம் அலாதியாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. கலைக்கோட்டன் இருதயநாதன் ஒரு ஓய்வொளிச்சல் இல்லாத கலைஞன். ஓய்வுபெற்ற அதிபராக இருந்தாலும் எழுத்தில், இலக்கியத்தில் ஓய்வில்லாமல் சுறுசுறுப்பாக நடமாடுபவர்.

இவரது இந்த உணர்வுகள் நாடகத் தொகுப்பு பரிசுபெறும், பாராட்டுப் பெறும் என்று வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்
அன்புடன்
**செ.குணரெத்தினம்**
அமிர்தகழி, மட்டக்களப்பு.
24.06.2017.

# கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளரின்

# பதிப்புரை

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பொறுப்புகளில் ஒன்றான கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட திறமையான நூல் களை பிரசுரிக்கின்ற பணித்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்படுகின்ற இந் நூலினூடாக மீண்டும் ஒரு தடவை அனைவரையும் சந்திப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

ஆக்க இலக்கிய படைப்புகள் இலகுவில் நிகழ்ந்து விடுவதில்லை. படைப்பாற்றலுள்ள ஆளுமையுடன் சீரிய எண்ணங்களோடு கூடிய கற்பனைகளின் தொடரியலையும் கடந்து வரும் போது தான் ஆக்கங்கள் பிறக்கின்றன. படைப்பாளனின் அனுபவம் மற்றும் தன் மனதை ஈர்க்கும் கற்பனையை நனவாக்கும் முயற்சியின் வெற்றியாகவே படைப்பாக்கங்கள் பிரசவிக்கின்றன. இவை இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களை சுமந்து வருகின்றன. அவை சமூகத்தின் பரிணாம வளர்ச்சியில் விழுமியங்களின் வெற்றிப்பாதைக்கு உறுதுணையாக அமைகின்றன.

இயந்திரமயமான இன்றைய வாழ்வியல் சூழலில் விரிசிந்தனையுடன் மனிதன் வாழ வாசிப்பு பழக்கம் அவசியம். இச் செயற்பாடு ஊக்குவிக்கப்பட வேண்டும் என நம்புகின்றேன்.

2017 ஆம் ஆண்டு தமிழ் மொழி மூலம் நூலுருவாக்கத்திற்காக கிடைக்கப்பெற்ற 33 கையெழுத்துப்பிரதிகளில் காத்திரமானதும் தரமானதுமான ஒன்பது (09) நூல்கள் ஈடுபாடு கொண்ட துறை சார் நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. இளம் படைப்பாளிகளின் கன்னி வெளியீடுகளும் மூத்த எழுத்தாளர்களது அனுபவ ஆக்கங்களும் சிறுகதை தொகுப்பு, நாவல், காவியம், சிறுவர் இலக்கியம், இசைப்பாடல், நாடகம், ஆய்வு என பல்வேறு பரிமாணங்களில் நூலுருவாக்கம் இடம்பெறுவது இவ் வருடத்தின் சிறப்பான அம்சமாக அமைந்தது.

" உணர்வுகள்" எனும் நூலின் நூலாசிரியர் திரு. அ.இருதயநாதன் தனது பட்டறிவின் விரிவான சிந்தனையுடன் அழகியலையும் மொழி வாண்மையையும் ஒன்றிணைத்து உருவாக்கியுள்ள இப் படைப்பிற்காக அவரை பாராட்டுவதுடன் தொடர்ந்தும் தனித்துவமான முத்திரையுடன் இத்துறையில் பிரகாசிக்க திணைக்களம் சார்பில் வாழ்த்துகின்றேன்.

**திருமதி சிவப்பிரியா வில்வரத்னம்,**
மாகாணப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.

# என்னுரை

எல்லாம் வல்ல ஆதி பிதாவானவரைத் தோத்தரித்தவனாக என்னைப் பெற்று ஆளாக்கி இறையடி சேர்ந்துள்ள என் நெஞ்சினிலே நிறைந்துள்ள அன்புப் பெற்றோர்களான பொன்னையா ஜோசப் அழகையா, திரேஸ் பூரணம்மா ஆகிய இருவரையம் வணங்கி நிற்கின்றேன்

இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ளதே பாலமீன்மடு என்னும் அழகிய கடலோரக் கிராமம். இங்கு 08.05.1949-ல் பிறந்து வளர்ந்து ஆரம்பக்கல்வியை இங்கிருந்த மட்/பாலமீன்மடு மெ.மி.த.க. பாடசாலையிலும், பின்னர் மட்டக்களப்பு நகரில் உள்ள மட்/புனித மிக்கேல் கல்லூரியிலும் கற்றேன். 1975 தொடக்கம் புனித மிக்கேல் கல்லூரியிலேயே ஆசிரியராகவும், பின்னர் 1997 – 78-ல் ஆசிரியர் பயிற்சியும் பெற்று மீண்டும் புனித மிக்கேல் கல்லூரியில் பணியாற்றினேன்.

பின்னர் 1998 தொடக்கம் மட்டக்களப்பின் மிகமிக கஷ்டப்பிரதேசமானதும் யுத்தமுனைப்பு காத்திரமான முறையில் நிலைகொண்டு பொதுமக்கள் உள்ளிட்ட பல தரப்பினரையும் நிலைகுலையச் செய்து கொண்டிருந்த படுவான்கரைப் பிரதேசப் பாடசாலைகளில் சுமார் 18 வருடகாலம் அதிபராக கடமையாற்றினேன். எல்லாம் 34 வருட கலவிப் பணி எனக்கு உரித்தானது.

எனது பணிக்காலத்தில் கலையினை உயிரிலும் மேலாக நேசித்தேன். சமூகத்திற்கு நாடகங்கள் கூத்துக்கள் மூலமாக எதைச் சொல்ல வேண்டும் என எனக்குப்ப பட்டதோ அதை கலைவடிவங்களாக்கினேன். பக்தி, புராண இதிகாசக் கதைகளில் சமகாலத்திற்குரிய தத்துவங்களையும், படிப்பினைகளையும் தயக்கமின்றி நாடகங்கள் மூலம் உரைத்தேன்.

"வினை தீர்த்த வேலன்" என்ற புராதன நாடகத்தில் "போர் வேண்டாம்" என்ற ஒலியை எழுப்பினேன். "சிலம்புச் செல்வி" என்ற நாடகத்தில் ஈழத்து இளைஞர்களின் வீரதீரச் செயல்களைக் காட்சிகளாக்கினேன்.

"காலனை வென்றவன்" என்னும் மார்க்கண்டேயர் சரிதையில் கல்வியின் பெருமையையும், குற்றமிழைத்தோருக்கான தண்டனைகளையும் நிலைநிறுத்தி காட்சிகளமைத்தேன். இவைகள் இன்றும் அப்பகுதி மக்களின் நெஞ்சங்களில் வாழ்கின்றன. இதுவே எனக்குக் கிடைத்த விருதுகளுக்குள் உயர்வானவைகளாகும்.

தற்போதுள்ள நிலைக்கு என்னை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் உட்பட்ட அவரோடிணைந்த உத்தியோகத்தர்கள் எனக்கு வலுச்சேர்த்துள்ளனர். வெறுமனே கையெழுத்துப் பிரதிகளில் கலைக்காலத்தைத் தள்ளிய எனக்கு எனது "உணர்வுகள்" என்ற நாடகத் தொகுதி நூலாக்கம் செய்வதற்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் முன் வந்துள்ளமை நான்

இடைவெளியின்றி, தங்குதடையின்றி மேற்கொள்ளகின்ற கலைப்பயணத்துக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும்.

பொறுமையோடு கலைப்பயணம் மேற்கொள்ளுகின்ற எனக்கு எனது ஓரளவான திறமை கண்டுணரப்பட்டு எனது உணர்வுகள் நூல் உருவாக்கம் பெறுகின்றது.

இதற்காக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் அவரது உத்தியோகத்தர்கள் , ஆசியுரை வழங்கிய அருட்பணி யோண் ஜோசப் மேரி யேசுசபை சுவாமி அவர்கள், அணிந்துரை வழங்கிய கவிஞர் செ.குணரத்தினம் அவர்கள், வாழ்த்துரை அளித்த மட்/புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் அருட்பணி போல் சற்குணநாயகம் (யேசுசபை) சவாமிகள்

அடுத்ததாக உள்ளம் எல்லாம் நிறைந்த ஒரு படைப்பாளி பற்றி சிறு பார்வையும் பதிவும் என்ற தலைப்பில் என்னைப் பற்றி புனித மிக்கேல் கல்லூரியில் எனது மாணவர்களில் ஒருவராக கல்விகற்ற கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா அவர்கள் மற்றும்

அட்டைப்படத்தினை வரைந்த திரு.எஸ்.டானியல் விரிவுரையாளர் அவர்கள்

கணிணி அச்சுப்பதிப்பு – மட்டக்களப்பு மொழி கொமினிகேஷன். ஆகியோருக்கு எனது மனம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலைக்கோட்டன் அ.இருதயநாதன்**

114/3 சந்திரா ஒழுங்கை
திருமலை வீதி,
மட்டக்களப்பு, இலங்கை.

28.06.2017.

# உள்ளே...

1. உணர்வுகள்

2. குருதிகளின் குலம் ஒன்றே

3. கௌரவம்

4. இரக்கம்

5. கடையாணி

1

# உணர்வுகள்

# காட்சி - 01

**கதைக்களம்** : பாடசாலையில் உயர்தர வகுப்பறை

**கதாபாத்திரங்கள்**

ரதி : ஆசிரியை

பரீதா : மாணவி

மனோஜ் : மாணவன்

டியூலா : மாணவி

சிவா : மாணவன்

மணி : பாடசாலை பியோன்

**சம்பவம்** : அன்று பாடசாலை ஆரம்பமாகியதும் பரீதா தங்களது வகுப்பறையினுள் வந்து நோட்டம் விட்டபடி...!

**பரீதா** : இறைவா! என்னப்பா இது? இந்தக் கிளாஸ்றூம் கிடக்கிற கிட. ஏ.எல்.படிக்கிற புள்ளையல்ற கிளாஸ்றூமா இது! நாமெண்டான கூட்டித் துப்புரவாக்குவம்!

(தும்புத்தடியை எடுத்துப் பரீதா கூட்டுதல், மனோஜ் வருதல்)

**மனோஜ்** : குட் மோர்னிங் பரீதா! என்னடாப்பா கிளாஸ்றூம் கூட்டுற மாதிரிக்கிடக்கு.

**பரீதா** : இப்படித்தான் கேட்பீங்க! இஞ்ச பாரன் மனோஜ்! பிறைமரி படிக்கிற ஸ்டுடன்ஸ்ர கிளாஸ்றூமெண்டான எவ்வளவு நீற்றாக இருக்கும்.

(அவ்வேளையில் சிவாவும், டியூலாவும் வருதல்)

**டியுலா** : குட் மோர்னிங் பரீதா!

**மனோஜ்** : இந்தா பார் டியூலா! பரீதாவ டிஸ்ரப் பண்ணாத!

பரீதா : என்ன மனோஜ் சிவாவும், டியூலாவும் ஜோடியாக வாறாங்க?

சிவா : பரீதா உங்களுக்கு விளங்கினா சரி!

பரீதா : ம்! சரிதான் எண்ட வாப்பா! கூட்டின கூட்டுவயில விட்ட விடியங்காட்டில வேருத்து விருவிருக்குது! ப்பூ! ப்பூ!

சிவா : என்ன பரீதா! வேருவைய துடைச்சி விடவா!

பரீதா : கையில என்ன வெச்சிருக்கிறனெண்டு தெரியுதுதானே?

(அப்போது ரதி ஆசிரியை வகுப்பறையினுள் வரல்)

டியூலா : சிவா! ரீச்சர் வாறா!

எல்லோரும் : குட் மோர்னிங் ரீச்சர்!

ரதி ரீச்சர் : குட்மோர்னிங் ஸ்டுடன்ஸ்! என்ன இண்டைக்கு கிளாஸ்றூம் வெரி கிளீனாக இருக்கே!

சிவா : நான்தான் ரீச்சர் ஏளியாக வந்து கிளாஸ்றூம கூட்டி நீற்றா வைச்சனான். பரீதாட்ட கேட்டுப் பாருங்க ரீச்சர்.

ரீச்சர் : உண்மையாகவா பரீதா?

பரீதா : ஓம் ரீச்சர். சிவாதான் எல்லாருக்கும் முதல்ல வந்து கிளாஸ்றூம கூட்டிக் கிளீன் பண்ணினவன்!

ரீச்சர் : அதுசரி! சிவா தனிய வந்திருக்கமாட்டானே! என்ன டியூலா?

டியூவா : என்ன ரீச்சர் நீங்க என்னட்ட கேட்கிறீங்க?

ரீச்சர் : நான் மட்டுமில்ல எல்லாரும்தான் கேட்பாங்க! என்ன சிவா?

சிவா : ரீச்சர்! பிளீஸ் ரீச்சர்! பிளீஸ்!

ரீச்சர் : இந்தா பாருங்க! உங்கட வயதுக்கோளாறுகள் இருக்கத்தான் செய்யும். என்னண்டாலும் முதல்ல ஏஎல்ல கொம்பிளீற் பண்ணி நல்ல ராங்கோட கெம்பசுக்கு போற வேலையப் பாருங்க! (பரீதா கொல்லொன்று சிரித்தல்)

மனோஜ் : என்ன பரீதா சிரிக்கிறாய்! இந்த ஜோடி கட்டாயம் கெம்பசுக்கு போகத்தானே போகுது!

பரீதா : நல்லா படிச்சா! படிக்கிறமாதிரி படிச்சா! எல்லாரும்தான் கெம்பசுக்குப்போகலாம்.

ரீச்சர் : அதுசரி! இண்டைக்கு மற்ற ஸ்டுடன்ஸ் எல்லாம் எங்க போயிட்டாங்க? நீங்க ஒரு நாலு பேர் மட்டும்தானே இருக்கிறீங்க மற்றவங்க?

மனோஜ் : அவங்க செமினாருக்குப் போயிட்டாங்க ரீச்சர்!

ரீச்சர் : செமினாருக்கோ ஆரு வைக்கிறாங்க?

மனோஜ் : அது ரீச்சர் கெம்பஸ் பாஸ்அவுட் பண்ணின மூண்டு ஸ்டுடன்ஸ்ஸாம் வெளிமாவட்டத்தில இருந்து வந்தவங்களாம்.

ரீச்சர் : சரி சரி எங்கெண்டான படிச்சா சரி நான் இண்டைக்கு பிறைக்ரிக்கல்ஸ் செய்யப்போறன்.

மனோஜ் : எக்ஸ்கியூஸ்மீ ரீச்சர்! வராத ஆக்களுக்கு என்ன செய்யப் போறீங்க ரீச்சர்?

ரீச்சர் : வராதவங்கள என்ன செய்யிற! ரீயூட்டறிகள்ள பிறைக்ரிக் கல்ஸா செய்யப்போறாங்க வாற சற்றடே அவங்களைக் கூப்பிட்டுச் செய்வம்.

சிவா : உங்களுக்கு றிஸ்க்தானே ரீச்சர்! ஹொலிடேயில உங்கட வீட்டு வேலையை பாக்கவேணும்தானே ரீச்சர்.

ரீச்சர் : என்ன செய்யிற சிவா? ஒவ்வொரு வருஷமும் நம்மட ஸ்கூலால்ல மெடிஷனுக்கு இந்த டிஸ்றிக்கில கூடுதலாக போறவங்க நம்மட ஸ்டுடன்ஸ்தான். அத மெயின்டனன்ஸ் பண்ண ரீச்சர்ஸ்தான் கஸ்டப்படவேணும்.
(அப்போது பிரின்ஸ்பிளின் பியோன் வருதல்)

மணி : எக்ஸ்கியூஸ் மீ மிஸ்!

ரீச்சர் : சொல்லுங்க மணியண்ணன்!

மணி : ஏ.எல். ரீச்சர்ஸ்சுக்கு அவசரமான மீற்றிங் இருக்காம். பிரின்ஸ்சிபள் சேர் உங்கள வரச் சொன்னார் மிஸ்.

ரீச்சர் : சரி நான் வாறன்! (பியோன் சென்றதும்)

ரீச்சர் : என்னப்பா இது! வந்த கையோட ஸ்ராப் மீற்றிங்! சிலபஸ்சும் முடிக்க வேண்டிக் கிடக்கு.

பரீதா : நீங்க போயிட்டு வாங்க ரீச்சர். நான் கிளாஸை பார்த்துக் கொள்றன் ரீச்சர்.

சிவா : ஓம் ரீச்சர் நீங்க போயிட்டு வாங்க ரீச்சர் பரீதா பார்த்துக் கொள்ளுவாள். (ரீச்சர் வெளியேறுதல்)
(சிவா டியூலாவுக்குப் பக்கத்தில் போய் இருந்து கொள்ளுகிறான்)

டியூலா : ஐயோ சிவா! என்னயிது? இவ்வளவு குளோசப்பா வந்திருக்கிறீ?

சிவா : நான் உன்னோட கொஞ்சம் பேசவேணும் டியூலா!

டியூலா : இது! இது! கிளாஸ்றூமுக்குள்ள! ஐயோ பிளீஸ் சிவா! உன்ர இடத்துக்குப்போ!

சிவா : அப்படியெண்டால் நான் உன்ர வீட்டுக்கு வந்தா கதைக்கிற?

டியூலா : துணிச்சல்தான் என்ன?

சிவா : நாம லவ் பண்ண இறங்கிட்டம் இனி என்ன?

டியூலா : இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னாலதான் ரீச்சர் அட்வைஸ் பண்ணினவைஅத மறந்திட்டியா?

சிவா : சும்மா போ டியூலா! நான் உன்னை விரும்புறேன். நீ என்ன விரும்புறா தற்ஸ்சோல் ஓ கே!

மனோஜ் : டேய் சிவா! டேய் மடையா எரும அங்க பார்ரா ரீச்சர் வாறா!

(அவசரத்தில் தனது செல்போனை டியூலாவின் மேசை மீது வைத்துவிட்டு எழுந்து ஓடிச்சென்று தனது இடத்தில் இருந்து கொள்கிறான். ரீச்சர் போணைப் பார்த்து)

ரீச்சர் : டியூலா! என்னயிது! உம்மிட மேசையில போன் ஒன்டு இருக்குது? போன் கொண்டு வராதீங்க என்டு பிரின்ஸ்சிபள் அசம்பளியில எத்தின தரத்தில் சொல்லியிருக்காரு. நீங்கெல்லாம் படிப்பில குழம்பிப்போறதுக்கு இந்த போண்தான் இப்ப முக்கிய ரீஸனாக இருக்கு!

பரீதா : ரீச்சர் அதக் கொண்டு போய் பிறின்ஸ்சிபளிட்ட குடுங்க ரீச்சர்.

சிவா : பரீதா! நீ வாயமூடு பாப்பம்?

பரீதா : ஐசே! நான் இந்த கிளாஸ் மொனிட்டர் யூ! யூ! அண்டர்ஸ்டான்ட்!

ரீச்சர் : சிவா! உமக்கு பெஸ்ட் அன்ட் லாஸ்ற் வோர்னிங்.

சிவா : தங்யூ வெரி மச் ரீச்சர்! மிஸ் பரீதா! மொனிற்றர் உங்களைத்தான் தாங்ஸ் ஆ!

ரீச்சர் : சரி! உங்களுக்கு ஒரு குட் நியூஸ்

எல்லாரும் : என்ன ரீச்சர்! சொல்லுங்க ரீச்சர்

ரீச்சர் : இப்ப நடந்த ஸ்ராப் மீற்றிங்ல ஏ.எல் ஸ்டுடன்ஸ் எல்லாரையும் எடியூகேசனல் டூர் கூட்டிப்போகத் தீர்மானிச்சிருக்காங்க!

**மாணவர்கள்** : வாவ்! எங்க ரீச்சர் போகவாம்!

**ரீச்சர்** : கண்டி, ஹற்றன், நுவரெலியா இப்பிடியான அப்கன்றிப் பக்கம்தான் திறீ டேய்ஸ் டூர்! போறவங்க உங்கட பேரன்ஸ்கிட்ட பெமிஷன் லெட்டர் வாங்கிட்டு வாறது வெரி, வெரி இம்போட்டன்ட்!

**பரீதா** : இவங்களா ரீச்சர்! அம்மா அப்பா எழுதின எண்டு இவங்கதான் எழுதி கையெழுத்தையும் வச்சிட்டு வருவானுகள்.

**ரீச்சர்** : அது சரி! எக்ஸ்ஸாம் புறோக்கிறஸ் காட்டில இவங்கதானே சிக்னேஜர் வைச்சிட்டு வாறாங்க. இதெல்லாம் எங்களுக்குத் தெரியாதா? இப்படியான வேலையெல்லாம் உங்களை நீங்களே ஏமாத்திக்கொள்ற வேலை எண்டத மறந்திடாதீங்க?

**பரீதா** : அதெண்டா உண்மைதான் ரீச்சர்! இந்தச் சனங்களுக்கு விளங்கோணுமே ரீச்சர்!

**ரீச்சர்** : சரி! சரி! டபிள் பீரியற்தானே எல்லாரும் எழும்பிற்று லைன்ல போங்க பிறைக்ரீக்கல் செய்ய வேணும் லப்புக்கு போவம்!

**(திரை)**

## காட்சி - 02

**கதைக்களம் :** டியூலாவின் வீடு

**கதாபாத்திரங்கள்**

நவம்

சுமதி

மெலானி

டியூலா

சிவா

ரவி

**சம்பவம்** : டியூலா பாடசாலை முடிவடைந்து, நடந்து வந்த களைப்பில் வீட்டிற்கு வருதல் தான் கொண்டு வந்த ஸ்கூல் பேக்கை அங்கிருந்த ஒரு கதிரையில் வைத்துவிட்டு தான் அணிந்திருந்த சப்பாத்து, காலுறை, டை எல்லாவற்றையும் கழற்றி அந்த

ஹோலின் நடுவே போட்டுவிடுகிறாள். பின்னர் உள்ளே சென்று யூனிபோமை மாற்றிவிட்டு சாப்பாட்டுப் பீங்கானுடன் வந்திருந்து கதிரையில் இருந்து சாப்பிட்டுவிட்டு அதே கதிரையில் சரிந்திருந்து தூங்கி விடுகிறாள். அப்போது டியூலாவின் அக்காவான மெலானி வந்து டியூலாவைப் பார்த்துவிட்டு ஆத்திரத்துடன்...

**மெலானி** : டியூலா அடியே! என்னடி! கதிரயில கிடந்து நித்திர கொள்ரா! நித்திர வந்தா உள்ளே போய் படுக்கிறதானேடி! இஞ்சபாரன் சூஸ், ஸ்ரொக்கிங்ஸ் எல்லாம் வேருவையோட சுருட்டிப் போட்டபடியே கிடக்கு! என்னடி இது!

**டியூலா** : என்னக்கா வாயில வந்தபடி திட்டித் தீர்க்கிறா! (மெலானி டியூலாவுக்கு ஏசியபடியே அங்கு கிடந்த அவளது பொருட்களை எடுத்து உள்ளே கொண்டு வைத்தபடி வரல். அப்போது இவர்களது தாய் சுமதி வந்து)

**சுமதி** : டியூலா! சாப்பிட்டுத்தியா மகள்?

**மேலானி** : ஓ! மகளிட்ட விசாரிக்க வந்திட்டா! இஞ்ச பாருங்கம்மா நீங்க கொஞ்ச நேரத்துக்கு முன்னால இஞ்ச வந்து பாத்திருக் கோணும். இந்த ஹோல் கிடந்த கிடைய! எல்லாத்தையும் கழட்டிக் கழட்டி எறிஞ்சு வைச்சிருந்தாள்.

**சுமதி** : மெலானி! டியூலா ஸ்கூல் விட்டு நடந்து வந்த களைப்பில இருந்திருப்பாள்.

**மெலானி** : நல்ல புதினக் களைப்புதான் இவளுக்கு. எத்தன பிள்ளைகள் கால்நடையா எவ்வளவு தூரமெல்லாம் இருந்து வந்து ஸ்கூல்ல படிச்சிற்றுப் போகுதுகள். நீங்கதானம்மா இவள கெடுக்கிற. என்னண்டாலும் செய்யுங்க?

**சுமதி** : கடவுளே ஆறு மணியும் தாண்டப் போகுது?

**மேலானி** : எங்கம்மா போகப் போறீங்க?

**சுமதி** : எங்க போறதுநான்! நேற்று நல்லதொரு கட்டத்துல கொண்டுபோய் நாடகத்த முடிச்சுப்போட்டான். ராசாத்தி அன்ரிட வீட்ட ரீவியில நாடகம் பாக்கப்போறன். அந்தா! அற் போடுற சவுண்ட் கேக்குது நான் போறனப்பா!

மெலானி : நீங்க போங்க! நானும் ஸ்கேர்ட் தைக்கக்கொடுத்தனான். போய் எடுத்துட்டுவாரன்.

சுமதி : ஸ்கூட்டில கவனமாக போயிட்டுவா மெலானி ஹெல்மட் போடாம போயிராதே (சுமதி வெளியேற மெலானியும் ஹெல்மட்டைப் போட்டபடி போகிறாள். டியூலாவின் தந்தை நவம் வேலைமுடிந்து மேசன் கரண்டியுடனும், மட்டப்பலகையுடனும் வருகிறார்.)

டியூலா : வாங்கப்பா!

நவம் : எங்க மகள் அம்மா?

டியூலா : பக்கத்து வீட்டு ரீவியில நாடகம் பார்க்க அம்மா போயிட்டாப்பா!

நுவம் : எங்க அக்காவையும் காணல்ல?

டியூலா : அக்காவும் ஸ்கேட் தைக்கக் குடுத்ததாம், அத எடுக்கப் பெயிட்டாளப்பா!

நுவம் : சரி மகள்!

டியூலா : இருங்கப்பா ரீ போட்டு வாறன்.

நவம் : இல்ல மகள் நான் வேல செஞ்ச கிழமக்காசு வாங்க முதலாளிற்றப் போய் வாங்கிற்று, மறுகா ராவு ஆத்துக்குப் போனாப்ப ஒரு கிலோ இறால் வீசிப்புடிச்சி வித்தனான்! மாத்தின காசு இல்லண்டு வரச்சொன்னவன் ! அதையும் வாங்கித்து அரிசி, சீனி, மரக்கறி ரெண்டு மூணு சாமான் வாங்கித்து இந்தா போறதும், வாறதுமா வாறன் நீ படி மகள்!

டியூலா : சரியப்பா இருட்டி வருது. நேற்றும் நம்மட கோயிலடி யூ ரேணுல வச்சிநடந்து போன ஒரு ஆள மோட்டவைக்காரன் ஒருவன் அடிச்சுப்போட்டு ஓடிப்போய்டான் அப்பா.

நவம் : எல்லா இடத்திலயும் பொலிசும் நிக்குதுதான் சிலவனுகள் தலதெறிச்சு ஓடுறானுகள். சரியம்மா நீ இரு.

(நவம் வெளியே செல்லல். டியூலாவுக்குக் கோள் வருகிறது)

டியூலா : ஹலோ சிவா என்ன சிவா! என்ன இஞ்ச வீட்ட வந்து கொண்டுறிருக்கிறீங்களா சரி டயலொக் வோட் போட்ட சின்னக் கடை ஒண்டு இருக்குத்தானே! சரி! சரி அந்த லேன்தான்.

(டியூலா கதிரைகளை ஒழுங்குபடுத்துகிறாள்)

சிவா : டியூலா...! டியூலா...!

டியூலா : வாங்க சிவா இருங்க! (சிவா கதிரையில் இருந்தபடியே)

சிவா : டியூலா எங்க வீட்டில ஒருத்தரையுமே காணல்ல?

டியூலா : எல்லாருமே வெளியில போயிட்டாங்க

சிவா : அப்படியா வெரி குட்

(தான் இருந்த கதிரையைத் தூக்கி வந்து டியூலாவின் கதிரையோடு நெருக்கமாய் போட்டுவிட்டு சிவா இருக்கின்றான்.)

டியூலா : என்ன சிவா இது! இப்படி?

சிவா : இப்படித்தான் ! உன்னட்ட ஒரு விசயம் சொல்ல வேணுமெண்டு நினைச்சினைச்சு இருந்தனான். அத இப்ப உன்னட்டச் சொல்றன் ! இஞ்ச காத கொண்டுவா?

(டியூலாவிடம் இரகசியமாக ஏதோ சிவா பேசுதல்)

டியூலா : சீ! சிவா என்னயிது என்ன கேக்கிறீங்க?

சிவா : டியூலா! நீ என்னோட கதைக்கத் தொடங்கினபிறகு என்னால உன்னப் பார்க்காம இருக்க முடியுதில்ல. பேசாம இருக்க முடியுதில்ல. நான்! நான்! உண்மையத்தான் சொல்றன்.

டியூலா : அதுக்காக, உங்கட உணர்ச்சிகளை என்மேல கொட்டித் தீர்க்கப்போறீங்களா! இதுக்கு நான் என்ர... என்னை நான் எப்படிச் சொல்றன் என்ர உடம்ப உங்களுக்கு தரோணும் அப்பிடித்தானே சிவா?

சிவா : ஐயம் வெரி ஸொரி ! டியூலா நான் உங்கட்ட கேட்டிருக்கவே கூடாது!

டியூலா : பார்த்தீங்களா சிவா! உங்கட தவற ஒரு நிமிஷத்திலேயே நீங்க உணர்ந்திட்டீங்க. நானும் உங்களுக்கு உடன்பட்டிருந்தா ஒரு நிமிஷமில்ல என்ர வாழ்நாள் எல்லாம்...

சிவா : பிளீஸ் ஸ்ரொப்பிற் டியூலா

டியூலா : ஓகே! ஓகே!

சிவா : சரி ! நாம் டூர் போறம் என்ன!

டியூலா : டூரப் பற்றி நான் என்னோட வீட்டில சொல்லவேயில்ல!

சிவா : டியூலா ! உமக்கும் சேர்த்து நான் டூர் காசக் கொடுப்பன்.

டியூலா : அவ்வளவு றிச்மேனா நீங்க! எனக்கு இண்டைக்குத்தான் தெரியுது

சிவா : அப்படியொண்டுமில்ல நான் அம்மா வைக்கிற காசு, இனி ரியூசன் பீஸ் இப்பிடி அதுகள்ள எடுத்து சேர்த்து வச்சிருக்கன்!

(இவர்கள் இருவரும் நெருக்கமாகப் பேசிக்கொண்டிருக்கும் வேளையில் டியூலாவின் அக்கா மெலானி திடீரென வருதல்)

மேலானி : அடியேய் ஆரிடி இவன்?

டியூலா : அக்கா என்னோட படிக்கிற வோய் அக்கா!

(மெலானியைக் கண்டதும் சிவா எழுந்து ஓடிவிடுகிறான்)

மேலானி : ஏண்டி இவன் இப்ப ஓடினவன்? வீட்டில ஒருத்தரும் இல்லாத நேரத்தில்... (டியூலாவைக் கண்டபடி மெலானி அடிக்கிறாள்)

டியூலா : அக்கா! அடிக்காத அக்கா!

மெலானி : (அழுதபடியே) அம்மாவும் அப்பாவும் இத அறிஞ்சா என்னடி செய்யுங்கள். என்ன துணிச்சல்றீ உனக்கு!

(மீண்டும் அடிக்கிறாள்)

மெலானி : நம்மட அப்பா! (அழுதல்) அப்பா பகலயில மேசன் வேலை செஞ்சி, ராவையில ஆத்துத் தொழிலுக்குப் போய் கண்முழிச்சி எவ்வளவு கஷ்டப்பட்டு நம்மள வளக்கிறார். அத மறந்து போயித்தியேடி. நீ! நீ! இருக்காத அவன் வந்து போனத ஆராவது பார்த்திருந்தா நம்மட மானம் மரியாத எங்கடி... நீ இருக்காத செத்துப்போடி! போ செத்துப்போ!

(மெலானியும் டியூலாவுக்கு அழுதபடி அடித்துவிட்டு வெளியே போகிறாள். டியூலாவுக்கு மெலானி கூறிய வார்த்தைகள் எதிரொலிக்கின்றன.

எதிரொலி : இவ்வசனத்தை மறைவிலிருந்தபடி கூறுதல் வேண்டும்.

மேலானி : நீ இருக்காத! செத்துப்போடி! செத்துப்போடி நீ இருக்காத செத்துப்போடி! (மெலானி சென்றதன் பின்பு)

டியூலா : நான்! நான்! (அழுதல்) நான் இருக்கமாட்டன். நான்

இருக்கவேமாட்டன். நான் செத்துப்போறன். அம்மா! அப்பா! நான் செத்துப்போறனம்மா என்னை மன்னிச்சிடுங்கம்மா! (அங்குள்ள கதவின் நீளமான கேட்டின் துணியை எடுத்து கழுத்தில் மாட்டக்கூடியதான சுருக்கு வளையத்தைக் கட்டி தூங்கித் தற்கொலை செய்தவற்காக டியூலா ஆயத்தமாகும் வேளை, அயல்வீட்டுக்காரரான ரவி என்பவர் அங்கு வருகின்றார்.)

ரவி : பிள்ளை டியூலா! என்னம்மா இது? (சுருக்குத் துணியைப் பறித்தெடுக்கிறார்) என்ன காரியம் செய்யப்போறா! இதேன் தூங்கிச் சாகப்போறா?

டியூலா : அங்கிள் (அழுதல்) ரவி அங்கிள் நான் சாகத்தான் போறன்.

ரவி : இதேன்! எதுக்காக நீ சாகப்போறா? இஞ்ச வா இந்த கதிரையில இரும்.

டியூலா : அழுதல்

ரவி : முதல்ல அழு! நல்லா அழு! அப்பதான் உன்ர மனச்சும குறையும். (ரவி அருகில் இருந்த குடிநீர் போத்தலை எடுத்து) இந்தாம்மா டியூலா இந்தத் தண்ணியைக் குடி! (டியூலா தண்ணீரைக் குடிக்கிறாள்) சரி இப்ப சொல்லு நீ செத்துப்போற அளவுக்கு உனக்கு என்ன நடந்தது சொல்லு?

டியூலா : ரவி அங்கிள்! எனக்கு அக்கா தாறுமாறா அடிச்சுப்போட்டாள்

ரவி : சரி !அக்காதானே அடிச்சா ! அக்கா ஒரு ரெண்டு மூண்டு அடி அடிச்சா அதுக்கு தூக்குப்போட்டு சாகிறதா?

டியூலா : என்ர வகுப்பில படிக்கிற சிவா எண்ட வோய் வந்து என்னோடு கதைச்சிக்கொண்டிருந்தது. அந்த நேரத்திலதான் அக்கா வந்து சந்தேகப்பட்டு அடிச்சா?

ரவி : ஓகோ! அப்படியெண்டால் நீங்களும் அந்தப் பையனும் வீட்டில எவருமே இல்லாத நேரத்தில இருந்திருக்கிறீங்க. அதில தப்பில்லியே நீங்க அந்தப் பொடியனோட...!

டியூலா : அங்கிள்! இந்த வீட்டில என்னை அன்புசெய்ய ஒருத்தருமே இல்ல அங்கிள் அவரவர் அவங்கவங்க வேலையைப் பார்ப்பாங்க.

ரவி : சரி! உங்களுக்கு ஏக்கமெனண்டால் அன்புத் தேவை என்ன? அப்படித்தானே! அதில் உங்களோட படிக்கிற ஸ்ருடன்ட்டோட

கூடுதலாகவும், ஐக்கியமாகவும் பழகினீங்க!

**டியூலா** : அதுதானங்கிள்!

**ரவி** : நான் இப்ப வெளிப்படையாகவே உங்களிட்ட கேட்கிறன். நீங்க அந்தப் பொடியன லவ் பண்றீங்களா? அத இப்ப சொல்லாதீங்க! அத பிறகு பார்ப்பம். ஏனெண்டால் நீங்க இப்ப ஏ.எல் படிக்கிற பிள்ளை, இந்தப் படிப்பு எல்லாத்தையும் முடிப்பம் என்ன?

**டியூலா** : ஓம் அங்கிள்!

(அப்போது நவம் வருதல்) சுருக்குத் துணியைக் கண்ட நவம் அதிர்ச்சியடைந்தவராக)

**நவம்** : ரவி அண்ணன்! டியூலா! என்ன (சுருக்குத்ட துணியைக் கையிலெடுத்து என்னம்மா இது!) (டியூலா அழுதல்) என்னம்மா நடந்தது? என்ன ரவி அண்ணனிது?

**ரவி** : தம்பி நவம்! பதட்டமடையாதீங்க! ஏதோ தலைபோக வந்தது. தலைப்பாகையோட போச்சிது எண்ட மாதிரி டியூலா தூங்கிச் சாக இருந்த நேரத்தில நல்ல வேளையாக நான் வந்திட்டன்.

**நவம்** : ரவியண்ணன்! எனக்கெண்டா நெஞ்சக்குள்ள என்னமோ செய்யுதண்ணன்

**ரவி** : நவம்! பதட்டமடையாத நவம்! இப்ப நடக்கவிருந்த பெரிய பிரச்சனையொண்டு இல்லாம போச்சி. தம்பி நவம் டியூலா வோட படிக்கிற பொடியன் ஒருவன் வந்து கதைச்சுக்கொண்டு இருந்திருக்கிறான். அத உன்ர மூத்த மகள் மெலானி பார்த்திட்டு ஆத்திரப்பட்டு இவள அடிச்சிருக்கா.

(மெலானி வருதல்)

**நவம்** : மெலானி! என்னபுள்ள இதெல்லாம் நீ ஏன்புள்ள உன்ர தங்கச்சிக்கு அடிச்சனி.

**மெலானி** : ஓமம்பா ! நான் வெளியில இருந்து வரக்குள்ள இவள் ஒரு பொடியனோட...

**நவம்** : நிற்பாட்டு மெலானி! உண்ட தங்கச்சியைப் பற்றி உனக்குத்

தெரியுந்தானே? இஞ்சபார் மெலானி! நீ இவள கண்டபடி அடிச்சதால இவள் இந்த தூக்கில் தூங்கிச் சாகப்போயிருக்காள். இந்த ரவி அண்ணன் வராட்டி என்ர புள்ள ஐயோ!

**மெலானி** : டியூலா! நான் இனி உனக்கு அடிக்கமாட்டன். (டியூலாவைக் கட்டி அணைத்து அழுதல்)

சுமதி வருதல்

**சுமதி** : டியூலா! மெலானி! என்னயிது! என்ன நடந்தது !

**நவம்** : நீ எங்கடி போனாய்?

**சுமதி** : நான் எங்கப்பா போன ! அந்த நாடகத்தை பாக்கப் போனன்.

**நவம்** : இஞ்ச வீடு கிடக்கிற கிடைக்குள்ள ! உனக்கு ஒரு நாடகம் என்னடி? (நவம் மனைவியை அறைதல்)

**ரவி** : நவம் ! சும்மா இருங்க பார்ப்பம்!

**நவம்** : இவள அடியாம என்ன செய்யிற நவம் அண்ணன். வளர்ந்த குமர்ப்பிள்ளைய விட்டுப்போட்டு இவளுக்கு நாடகம்தான் பெரிசு. இஞ்ச பாருடி ! டியூலா தூங்கிச் சாகப்பார்த்திருக்காள். நவம் அண்ணன் வராட்டி இப்ப இந்த வீடு சாவீடுடி.

**சுமதி** : ஏனம்மா உனக்கு இந்த முடிவு?

**நவம்** : இவள் என்ன வேல செய்யத் துணிஞ்சிருக்காள் கடவுளே!

**ரவி** : இஞ்ச பாருங்க திடீர் முடிவில் பலரும் பலவிதமாக மாட்டிக் கொண்டு பிறகுதான் திண்டாடுவாங்க. எல்லாரும் நல்லா கேளுங்க!

**நவம்** : சொல்லுங்க ரவி அண்ணன்!

**ரவி** : நம்மட மூளையில அமெக்டலா எண்ட நினைவுக்கிடங்கு ஒண்டு இருக்கு.

**நவம்** : அதென்னண்ணன் அது?

**ரவி** : இந்த நினைவுக்கிடங்கில வெற்றி, தோல்வி, பயம், எரிச்சல் எல்லாமேசேர்ந்திருக்கும்.

**நவம்** : நீங்க என்னென்னமோ எல்லாம் சொல்றீங்க அண்ணன்

**ரவி** : உங்களுக்கு மட்டுமில்ல டியூலாவைப்போல இப்படியான திடீர் முடிவெடுக்கிறவங்க நல்லா இத அறியோணும்.

நவம் : ரவி அங்கிள் சொல்றத கேளு புள்ள !

ரவி : ஏதாவது ஆபத்து வந்தா ! இல்லாட்டி ஆபத்து வரப்போகு தெண்டு தெரிஞ்சால் நம்மட உடல் உறுப்புக்கள உடனடியாக செயல்பட வைக்கிற, உத்தரவு, ஒரு செக்கனுக்குள்ள ! நான் சொன்ன அமெக்டலாவிலிருந்து, உடனே பறக்கும்! இத தடுத்து நிறுத்தவே முடியாது !

நவம் : மகளே! நீ குழந்தைப்பிள்ளையில்ல மகள். படிக்கிற பிள்ளை. அதுவும் ஏ.எல் படிக்கிற பிள்ளை.

டியூலா : அப்பா என்னை எல்லாரும் மன்னிச்சிருங்க நான் இனிமேல் இப்பிடியான முடிவுக்கு வரமாட்டன்.

ரவி : இஞ்ச பாருங்க நவம்! ஒரு குடும்பமெண்டால் ஒண்டாகக் கூடிப்பேசி சந்தோசமாக இருக்கவேணும். கொஞ்சநேரமாவது பிள்ளைகளோட கதைச்சிப்பேசி சுகதுக்கங்கள பகிர்ந்து கொள்ள வேணும். அப்போதுதான் மனம்விட்டுப் பேசும் நிலை ஏற்படும். நம்மட வாழ்க்கையெல்லாம் உணர்வுகள் நிறைஞ்ச வாழ்க்கைதான். உணர்வுகளை நாம கட்டுப்படுத்தி வாழ்ந்தால் மற்றவங்க விரும்புற ஒருவராக நாம வாழமுடியும். நமது குடும்பமும் மற்றவங்களால மதிக்கப்படும். இதத்தான் நம்ம படைச்ச இறைவனும் விரும்புவார்.

**(திரை)**

2

# குருதிகளின் குலம் ஒன்றே

# காட்சி - 01

கதைக்களம் : உமாவின் வீடு.

கதாபாத்திரங்கள் : உமா, விஜி, சுஜி

**சம்பவம் :** சுஜியின் தாயாரான உமா, மேடையில், வீட்டின் முன் ஹோலில் இருப்பதான காட்சி. உமா தனது மகள் சுஜிக்கு மாப்பிள்ளை பார்ப்பதற்காக கலியாணத் தரகரினால் கொடுக்கப்பட்ட போட்டோக்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அப்போது உமாவின் மூத்த மகளான விஜி அங்கு வருதல்

(உமா பெருமூச்செறிந்தபடி)

**உமா :** இறைவா! இறைவா!

**விஜி :** என்னம்மா! இண்டைக்கும் கொஞ்சம் போட்டோஸ் கிடைச்சிருக்குப் போல!

**உமா :** நான்தான், என்ன செய்வன் விஜி! உன்ர தங்கச்சி சுஜி ஒண்டுக்குமே ஒத்து வாறாளில்லையே! யூகேயில இருக்கிற உங்கட தாஸன் மாமாட மகன் ரூபண்ட கதைய எடுத்தாலே, பொறின் மாப்பிள்ளை தனக்கு வேண்டாமெண்டு பாய்ஞ்சி விழுகிறாளே! இவளென்னதான் புதினக்காறியோ தெரியாதே!

(அவ்வேளை உமாவின் இளைய மகளான சுஜி, தனது அலுவலகம் முடிவடைந்து களைத்தபடி வருகிறாள்.)

(சுஜி தனது ஹாண்ட் வேக்கை தாயின் கையில் கொடுத்து விட்டு)

**சுஜி :** மைகோட்! என்னதான் கஷ்டமாகக் கிடக்குதப்பா! பெற்றாவில இருந்து மொறட்டுவைக்கு வந்து சேர்ர எண்டாலே, வண்ணவர் எடுக்குதே! இனி வஸ்சுக்குள்ள ஏறினால் கேக்கவா வேணும், முட்டி மோதி, அங்க உரசி, இஞ்ச உரசி, சீ! வேணாமெண்டே போகுதப்பா!

**உமா :** விஜி! உன்ர தங்கச்சிர கதையப் பாரன்! கஷ்ரப்படாமல் வேர்க் பண்ணலாமெண்டு நினைச்சிட்டாள்! நாங்களென்ன சொகுசா இருந்த நாங்களோ! நைன்ரீன் செவண்டி, செவண்டி வண்ணில, றிங்கோவுல இருந்து பெரதெனியா யூனிவசிற்றிக்கு எவ்வளவு

றிஸ்க் எடுத்துப் போய் வந்தம், இப்பதானே, றோட்ஸ் என்ன! வஸ்ஸஸ் என்ன! நினைச்ச உடனே போய் வரக்கூடிய சிற்றியுவேஷன்

**சுஜி** : சும்மா போங்கம்மா! எப்பிடியோ காலத்தைக் கடத்தி முடிச்சி ருப்பீங்கம்மா! நாங்க கம்பஸ்ஸ முடிச்சுக் கொள்ள என்ன கஷ்ரப் பட்டம்! அப்போய் எனக்கெண்டா ஒரே ரயட்டா கிடக்குமா!

**விஜி** : ஏனம்மா! சுஜிர கதையக் கேளுங்களன்! இவள்தானே, பிடிச்ச பிடியாக நிண்டாள்! றிங்கோவுல மினிஸ்றியில வேர்க் பண்ணக்க, கொழும்புக்கு ராண்ஸ்ப்ர் எடுத்துக் கொண்டு போக வேணுமெண்டு!

**உமா** : இஞ்ச பாரும் விஜி! உன்ர தங்கச்சி கொழும்புக்கு வந்தபடியால்தான், எல்லா லங்குவேஜிலேயும் நல்ல புளுவண்டா இருக்கிறாள்! எல்லாத்தையும் விட எஸ் எல் ஏ எஸ் ல நல்ல றாங்ல பாஸ்பண்ணியிருக்கிறாள்!

**விஜி** : சரியம்மா! இவள் இப்ப நல்ல போஸ்ட்ல இருக்கிறாள்தான்! இதால நம்மட பெமிலிக்குப் பெருமை தானே! என்னைப் போல, இஞ்ச பாருங்க

(விஜி தனது இரண்டு கைகளையும் நீட்டிக் காட்டியபடி)

என்னைப் போல டாக்காக இல்லாவிட்டாலும், உங்களைப் போல நல்ல ஹான்ஸம்மாக இருக்கிறாள் தானே ! இருந்தும் என்னம்மா பிரயோசனம்

**சுஜி** : அக்கா! நீ சுற்றி வளைச்சு எங்க வந்து நிற்கிறீர்! எண்டு எனக்குத் தெரியுமக்கா!

**விஜி** : பிறகு என்னடி சுஜி! இந்தா இருக்கிற போட்டோஸ் எல்லாத்தையும் பாரன்! நான் இங்க வரக்குள்ள அம்மா இதெல்லாத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிறா

**உமா** : சரி ! சரி என்னதான் செய்வம்! எங்கட அப்பா அடிக்கடி சொல்லுவார்! தாரமும் கல்வியும் தலையெழுத்தெண்டு !

**விஜி** : அம்மா! இதைப்பற்றி நெடுகிலும் யோசிச்சு, யோசிச்சு இருந்தீங்க எண்டால் நீங்க பிறசர் பேசன்ட்!

**உமா** : அதுக்குத்தானே நான் தவறாமல் கிளினிக் போறன் சரி விஜி! என்ன திடீரென்று வந்த நீ !

விஜி : ஓமம்மா ! உங்களிடம் தான் வந்தனான்!
என்னம்மா ! அக்கா உங்களிட்டதானாமே வந்தவளாம் !

விஜி : சுஜி! அப்படியொண்டுமில்ல! வேணுமெண்டால், அம்மாவோட நீயும் ஜொயின்ட் பண்ணிக் கொள்ளன்!

சுஜி : என்னம்மா இவள், என்னவோ வேங்ல ஜொயின்ட் எக்கவுன்ட் வச்சிக் கொள்ற மாதிரிக் கதைக்கிறாள்!

விஜி : கிட்டத்தட்ட அந்த மாதிரித்தான் சுஜி! அம்மா இவரென்னெண்டால்..,

சுஜி : இவரெண்டா!

விஜி : தருவனிப்பா! உன்ர அத்தான்! ஸ்கொல்ல ரூ மந்த்ஸ் ஜப்பானுக்கு போகப்போறார்!

சுஜி : ஏற்கனவே அத்தான் சுவீசில இருந்திற்று வந்தவர்! இப்ப ஜப்பான் போகப்போறார்! நீயும் போறதானே!

விஜி : சும்மா போடி! நான் இங்க கொழும்பில இருந்தால் தான் இடைக் கிடையில் றிங்கோக்கு போய், நம்மட வீடு வாசல்கள் பார்த்திட்டு வரலாம்! அதோட மூதூர்ல அப்பா வாங்கிப்போட்ட வயலையும் பார்த்திட்டு வரலாம்!

சுஜி : போச்சுது போ! சரி! அத்தான் ஜப்பான்! நீ றிங்கோ பிளஸ் மூதூர்! சரியக்கா மெற்றருக்கு வாவன்!

விஜி : என்ன! உன்ர எஸ் எல் ஏ எஸ் புத்திய காட்றியா !

சுஜி : அக்கா! என்னெண்டு சொல்லண்டி! காலையில ஆறு மணிக்கு கட்டின சாறி

விஜி : என்னெண்டாலம்மா! கொஞ்சம் காசு மாறித் தாங்கம்மா !

சுஜி : இவ்வளவுதானா! ஏன் இதுக்குப்போய் அம்மாட்ட கேட்கிறாய்! எவ்வளவு காசெண்டு சொல்லக்கா நான் தாறனே!

விஜி : ஓ! தனிக்கட்டைதானே!

சுஜி : உண்ட கதைய பார்த்ததால் கெதியா முடிச்சிடெண்டு சொல்ற மாதிரித்தான் இருக்குது!

விஜி : அம்மா இவள் சரிப்பட்டுவாற ஆளில்லம்மா!

உமா : நானும் சுஜிட சிறப்பெல்லாம் பார்த்திட்டு...!

**சுஜி** : அம்மா! இந்த டயலொக் எல்லாத்தையுமே றிஜெக் பண்ணிற்று சும்மா இருங்கம்மா பார்ப்பம் அக்காவுக்கு நல்ல றிச்சான மாப்பிள்ளைய கட்டி வச்சிங்க அது ஒரு சிறப்பு ! இந்த வருஷத்திக்குள்ள அக்காட மூத்தவள் அனுட ஏஜ் அற்ரன் சிறப்ப நாம எல்லாருமே சேர்ந்து வெரி! வெரி கிறாண்டா . செய்து பார்க்கப்போறமே!

**உமா** : நான் என்னதான் செய்கிற எண்டு எனக்குத் தெரியாமல் இருக்குதே! பார்த்துக்கொண்டிருக்க இவளுக்கு வயசும் ஏறிக்கொண்டே போகுதே!

**சுஜி** : என்னடாயிது ! நம்மள சும்மா ப்றிடமாக இருக்கவே விடுகுதுகளில்ல! சரி! பார்ப்பம்!

**விஜி** : அம்மா! நான் இப்ப உங்களுக்கு ஒன்று சொல்றன்! இந்த புறோக்கர், போட்டோஸ், எல்லாத்தையுமே எறிஞ்சிபோட்டு யூகேயில் இருக்கிற தாஸன் மாமாவோட கதையுங்கோ, மாமாட மகன் ரூபனத்தான் சுஜிக்கு முடிச்சி வைக்க வேணும்!

(சுஜி சிரித்தல்)

**சுஜி** : ஓ! அவன் இப்ப யூகேயில, அவன்ர முப்பந்தைஞ்சு வயதுக்கும், அங்க சும்மாதான் இருக்கப்போறான்! அங்க ஆரார வச்சிருக்கானோ? இங்க இருக்கிற உங்களைப்போல ஆக்கள் கடைசியில ஏமாந்து போறதான் மிச்சம்!

**விஜி** : பாருங்கம்மா! இவள் கதைக்கிற கதைய இவள்ர கதையப் பார்த்தால் பொறின்ல இருக்கிற நம்மட வோய்ஸ் எல்லாருமே, என்னமோ தலைகீழாகத் திரியுதுகள் எண்டு, சொல்ற மாதிரித்தானேயிருக்கு!

**சுஜி** : இஞ்ச பாருங்க! நாளென்ன யூகேக்கு போனனானா? பொறின் கன்றீஸ்ல இருந்து வந்து இங்க உள்ள கேர்ள்ஸ்ஸ தடல்புடலாக வெடிங்க நடத்திட்டு, அங்க போனதுகள்ர ஹிஸ்ரிகள நானும் அறிஞ்சதால தான் நான் சொல்றன் !

**விஜி** : ஒப்பிஸ்வளிய உங்களுக்கு வேற என்னதான் வேலை! இதுகளைப்போட்டு கந்தல் பார்க்கிறதானே வேலை!

**சுஜி** : பரவாயில்லையே! நீ கொழும்புக்கு வந்து செற்றில் பண்ணினாலும், நம்மட விலேஜ் சொல்லுகள் கொஞ்சத்த கொண்டுவந்து சேர்த்திட் டாயென்ன! இந்தா வந்திற்றே கந்தல் பார்க்கிற எண்ட கத !

**(திரை)**

## காட்சி - 02

**கதைக்களம் :** ஒரு பொது இடம்

ஒரு பஸ் தரிப்பு நிலையமாகவோ அல்லது ஒரு பூங்காவாகவோ எப்படிப்பட்ட பொதுவான இடமாகவோ மேடையில் காட்சி அமைப்பினை அமைத்துக் கொள்ளலாம்.

**கதாபாத்திரங்கள் :** ஹரன், சுஜி

**சம்பவம்:** சுஜி தனது வீட்டாருக்கு தெரியாமல் ஹரன் என்னும் இளைஞனை காதலிக்கிறாள். அவன் தாழ்வான சாதி என்ற காரணத்தினால் சுஜி தனது தாயான உமா சகோதரியான விஜி ஆகியோரிடம் இது பற்றி தெரியப்படுத்தாமலே உள்ளாள்.

(ஹரன் நின்று கொண்டிருக்கயில் சுஜி வருதல்)

**ஹரன் :** என்ன சுஜி! ஏஜண்டா மீற் பண்ணச் சொல்லி எஸ் எம் எஸ் அனுப்பி இருந்தீங்க!

**சுஜி :** ஹரன்! வீட்டாக்கள் என்னைப் போட்டு கரச்சல் படுத்துறாங்க! என்ர அக்கா விஜி! என்ர மெரிஜ்சைப்பற்றித்தான் அம்மாவோட ஒரே கதையாக கதைச்சிக் கொண்டிருக்கிறாள்!

**ஹரன் :** உங்கட அக்கா கதைக்கிற சரிதானே சுஜி! இதில நீங்க குறை நினைக்க ஒண்டுமில்லையே!

**சுஜி :** நீங்க என்ன சொல்றீங்க ஹரன்! நீங்க கதைக்கிறதப் பார்த்தால், யூகேயில் இருக்கிற எங்கட அம்மாட அண்ணண் தாஸன் மாமாட மகனுக்கு என்னை கழுத்த நீட்ட வச்சிடுவிங்க போலத் தெரியுதே!

**ஹரன் :** நான்! நான் இதுக்கு என்ன செய்யலாம் சுஜி! நீங்க என்னை லவ் பண்றீங்க! இது உங்கட வீட்டில எவருக்குமே தெரிஞ்சிருக்காது! இதை எப்படி அவங்களிட்ட உங்களால சொல்ல முடியும்! நான் ஒரு லோகாஸ்ற்! என்னை எப்படித்தான் அவங்களால ஏற்றுக் கொள்ள முடியும்!.

**சுஜி :** ஹரன்! இங்க பாருங்க! அவங்க ஒருத்தருமே ஏற்றுக் கொள்ளவே தேவையில்லை! நான்! நான் உங்கள் மனதார.....

**ஹரன் :** சுஜி! ஒரு மினிஸ்றியில பொறுப்பு வாய்ந்த ஒரு ஹை ஒப்பிஸராக இருக்கிறீங்க, என்னோடு எப்படி இந்த சமூகத்தில வாழ முடியும்.

**சுஜி** : ஹரன்! ஸ்ரொப் இற்! பிளீஸ்! நான் உங்களைத்தவிர வேற எவரோடையும் வாழப்போறவளில்லை!

**ஹரன்** : சுஜி! நீங்க என்னதான் சொல்றீங்க! உங்களால என்னதான் செய்ய முடியும்! உங்களால மட்டுமில்ல வேறு யாராலயுமே, இப்படியான சூழ்நிலையில வாழ்க்கைய அமைச்சுக் கொள்ள முடியாது!

**சுஜி** : முடியும் ஹரன்! முடியும்! எங்கட அம்மா அவட பாட்டில இருக்கட்டும்!.

**ஹரன்** : சுஜி! நான் சொல்றனெண்டு பிழையாக நினையாதீங்க! நீங்க என்னில கொண்ட காதல் உணர்வு உங்கட அம்மாவில உள்ள பாசத்த மறைச்சிடப்போடாது சுஜி!.

**சுஜி** : ஹரன்! இந்த சமுகத்தில நடக்காததையா நாம.......!

**ஹரன்** : சுஜி! நானும் வந்து உங்கள......!

**சுஜி** : என்ன ஹரன் வந்து போய், எண்டெல்லாம் கதைக்கிறீங்க! ஸ்ராட்டிலேயே என்னை நீங்க தவித்திருக்கலாம்!. அப்படித்தானே சொல்ல வாறீங்க! ஹரன் இது! இதுதான் காதல்! இதுதான் லவ்! இது சொர்க்கத்திலதான் டிசைட் பண்ணப்படுறதாக சொல்லுவாங்க!

**ஹரன்** : நீங்க என்னவெல்லாம் கதைக்கிறீங்கதான்! ஆனால்....!

(சுஜி ஏதோ சிந்தனையில் மூழ்கியவளாக)

**ஹரன்** : என்ன சுஜி! எதுவுமே பேசாமலே நிற்கிறீங்க

**சுஜி** : இனிமேல் உங்களோட பேசவே மாட்டன்! அம்மாவ கதற வைக்கிறன்! குட்வை!

(சுஜி பதட்டத்துடன் வெளியேறல்)

**ஹரன்** : சுஜி! சுஜி!

**(திரை)**

## காட்சி - 03

**கதைக்களம் :** உமாவின் வீடு

**கதாபாத்திரங்கள் :** உமா, சூரி, விஜி, ஹரன், சுஜி

**சம்பவம்:** சுஜியின் காதல் விவகாரத்தை பற்றி உமா அறிந்து கொண்டு, சுஜியின் காதலனான ஹரனை தங்களது வீட்டிற்கு வரும்படி போணில் அழைக்கிறார்.

அதே சந்தர்ப்பத்தில் தனது மூத்த மகள் விஜியையும் மகளின் கணவர் சூரியையும், அழைத்துப் பிரச்சினை எதுவுமின்றி சாமார்த்தியமாக ஹரனை விலத்தி விட உமா திட்டமிடுகிறார்

(சூரியும், விஜியும் வருதல்)

**உமா :** வாங்க மாப்பிள்ள!

**சூரி :** என்னன்ரி! எங்கள ஏஜண்டா வரச்சொல்லி கோள் பண்ணயிருந்தீங்களாம்! விஜிதான் சொல்லிச்சு!

**உமா :** ஓம் மாப்பிள்ள! எனக்கு நைற் முழுக்க தூக்கமேயில்ல!

**விஜி :** ஏனம்மா!

**உமா :** எப்படி என்னால தூங்க முடியும்! உன்ர தங்கச்சிர கூத்தால !

**சூரி :** என்னன்ரியது!

(உமா அழுதல்)

**விஜி :** என்னம்மாயிது! ஏனழுறீங்க!

**உமா :** சுஜி! ஒரு லோகாஸ்ட் வோய லவ் பண்றாள்! இத நேற்றுதான் நான் அறிஞ்சன்!

**விஜி :** யாரம்மா சொன்னவங்க!

**உமா :** ஒரு முக்கியமான ஒராள்! சுஜி ஒரு லோகாஸ்ட் வோயோட அடிக்கடி மீற்பண்றாள் எண்டு சொன்னார்.

**விஜி :** என்னம்மா சொல்றீங்க! இவள என்ன செய்ய வேணும்.

**உமா :** விஜி! வெயிற்! நான் இத அறிஞ்சிற்று, சுஜிர்ர ஒண்டுமே கேட்கல்ல, ஏன் தெரியுமா? இப்படியான விசயங்கள கெயாபுளாத்தான் ஹண்டில் பண்ணவேணும். ஓண்டு தெரியுமா? அந்த வோயயும் வரச்சொல்லியிருக்கிறன்.

**சூரி :** ஏனன்ரி!

**உமா :** நானவனிட்ட ஓபிணா வெரி கிளியரராகவே சொல்லி சுஜிய விடச் சொல்லப்போறன்! வீணாக அவன வோண்ட் பண்ணமாட்டன்.!

(சுஜி அலுவலகம் முடிந்து வருதல்)

**சுஜி :** ஹாய் அத்தான்! என்னத்தான், ஜப்பானுக்குப் போய் வந்த பிறகு, அத்தாண்ட ஹெயார் ஸ்டைல் எல்லாம் மாறிட்டு என்னக்கா!

**சூரி :** சுஜி! களைச்சுப் போய்தான் வந்திருக்கிறாய் எண்டாலும் நல்ல

ரீயாக போட்டுக் கொண்டு வா

(சுஜி உள்ளே போதல்)

(உமாவின் செல்போனுக்கு கோள் வருதல்)

**உமா :** ஹலோ தம்பி ஹரன் ! நான் சுஜிர அம்மாதான் கதைக்கன்!

அவ்வேளை சுஜி ரீகப்புடன் வரல் சுஜி தனது தாய் போணில் பேசுவதைக் கேட்டு அதனை அவதானித்து காது கொடுத்தபடி நிற்கிறாள்)

**உமா :** ஓம் தம்பி ஹரன் !

**சுஜி :** அம்மா யாரோடம்மா போனில!

**உமா :** போணில யாரோட கதைச்ச னான் எண்டா கேட்டாய்! ஹரன்! ஹரனோடதான் கதைச்சன்!

**சுஜி :** ஹரனோடயா!

**உமா :** இனி நாங்க ஆரோட கதைக்க வேணும்! உன்ர லவ்வர் ஹரனோட தானே! என்ன! ஹரன்ட நம்பர் எப்பிடி எனக்கெண்டு கேட்கப்போறியா இரவு உன்ர போணில இருந்துதான் எடுத்தன்.

**சுஜி :** என்னக்காயிது!

**உமா :** சுஜி! ஏன் அக்காட்ட கேட்கிறாய்! என்னட்ட கேளு! நான் தானே இப்ப ஹரன வரச்சொல்லிருக்கிறன்!

**சுஜி :** அம்மா!

**உமா :** என்ன! ஆ! ஏனம்மா ஹரன வரச்சொன்னீங்க எண்டு கேட்கப் போறியா! இல்லாட்டால்! மிஸிஸ் உமாசாந்தி கோணேசசர்மா, இது உங்க ளுக்குத் தேவையில்லாத வேலையெண்டு சொல்லப்போறியா!

**சூரி :** அன்ரி!

**உமா :** வெரி ஸொரி மாப்பிள்ள! என்னை இவள் உங்களுக்கு முன்னால இப்படியெல்லாம் பேச வச்சிற்றாளே! இவள் படிச்சாளாம் பட்டப்படிப்பெல்லாம்! யூஸ்லெஸ்பெலோ!

**சுஜி :** ஐயோ நானிப்ப என்னதான் செய்யிறது!

**விஜி :** அடியேய்! நீ ஒண்டேயொண்ட மனதில வச்சிக்கோ! எல்லாருக்கும் முன்னாலதான் சொல்றன்! நம்மட குடும்ப கௌரவத்த மறந்திடாத! போயும்! போயும்! ஒரு லோகாஸ்ட் வோயப்போய் ! சீ......!

உமா : சுஜி! உன்ர அக்கா சொல்றத பழைய டயலொக் எண்டு சொல்லப் போறியா இல்லாட்டால் புது டயலொக் எண்டு சொல்லப்போறியா!

(சுஜி அழுதபடி தனது தாயாரான உமாவின் அருகே சென்று உமாவை கட்டி அணைக்க முனைந்தபடி)

சுஜி : அம்மா!

உமா : சுஜி! லிசிண்ட்! இனிமேல், என்னை நீ அம்மா என்று கூப்பிடாத! ஏனெண்டால் நீ எனக்கு ஒரு நல்ல மகளாக இருக்கத் தவறிவிட்டாய்!

ஹரி : எக்ஸ்கியூஸ் மீ அன்ரி!

உமா : சொல்லுங்க மாப்பிள்ள!

ஹரி : எதுக்கும் அந்த வோய் வரட்டுமே அன்ரி!

விஜி : இவள்! இவளுக்கு வேற ஒரு பெடியனுகளும் கிடைக்கல்லியா!

சுஜி : நீங்க எல்லாரும் பிளான் பண்ணித்தான் ஹரன வரச் சொல்லி இருக்கிறீங்க!

உமா : இந்தா பார்! தேவையில்லாத கதைகளெல்லாம் கதைக்காத நான்தான் ஹரனுக்கு வரச்சொல்லி போண் பண்ணினன்!

சுஜி : ஹரன வரச்சொல்லி என்ன விடச் சொல்ல போறீங்களா!

உமா : பிறகென்ன! இந்தா உனக்கே தெரியுதே!

(சுஜி சிறிது நேரம் ஏதோ சிந்தித்தபடி நின்றவளாக)

சுஜி : நான் உங்களெல்லாரிடமும் சொல்றன்! என்னை மன்னிச்சிடுங்க! நான் ஹரனோட மிச்சம் குளோசாக பழகிட்டன்! நான் இப்போது ஹரன விட முடியாத கட்டமம்மா!

உமா : ஓ! அந்த அளவா!

விஜி : ஏண்டி! வயிற்றில வாயில வாங்கிற்றியா!

சுஜி : நாங்க ரெண்டுபேரும் ஒன்றாக இருந்ததால நீங்க சொல்ற மாதிரி... இனி நீங்க ஹரன ஏற்றுக்கொள்ளத்தான் வேணும்.

உமா : சரி! ஒண்டா இருந்தீங்க நீ இப்ப முழுகாம இருக்கிறா எண்டு சொல்லாம சொல்லிட்டா இப்போதைய ஸ்ரைல்ல இன்னுமொண்டு செய்வீங்களே என்னத்தில கிடக்குது! உங்கட குளோஸப் சீன் எல்லாம்!

சுஜி : என்னம்மா சொல்றீங்க!

உமா : இல்ல! பேஸ்வுக்கா! வட்ஸ்ஸப்பா! வுளுத்தோக்கா! ஆ! என்னத்தில ஸ்ரேரஸ் அப்டேற் பண்ணியிருக்கிறீங்க! என்ன பார்க்கிறாய்! நானும் ஈ பெகட்டில இருந்து பாஸவுட் பண்ணி, பீல்ட் வேர்க்ஸ் எல்லாம் உமா செய்ய மாட்டாய் என்று அப்பா சொல்ல விட்டுப் போட்டு வந்தநான்தான்!

விஜி : அம்மா! இவள விடுங்கம்மா! அவன் வரட்டும்.

உமா : இல்ல விஜி இவள்தான் நம்மள, விளக்மெயில் பண்ணப் பார்கிறாள்! இப்போதைய அம்மாமாருக்கு இந்தக்கால ரெக்னோலிஜி தெரிஞ்சிருக்க வேணும்! எண்டதுக்காகத்தான் சொல்றன்!

விஜி : அடியேய் துரோகி! சொல்லுடி எனக்கு மனம் பதைக்குதடி நீ என்னவும் மாசமா இருக்கிறியாடி!

உமா : உனக்கென்ன பைத்தியமா! இவள் இப்படிச் சொன்னால் நாம பெடியனப்பிடிச்சு கலியாணத்த முடிச்சு வைப்பமெண்டு பிளான் பண்ணிட்டாள்!

சூரி : அன்ரி! ரெண்டு பேருக்குமே சொல்றன் ஏன் நீங்க தேவையில்லாத விசயமெல்லாம் பேசிற்று....!

உமா : ஓம் மாப்பிள்ள அந்த ராஸ்கல் வரட்டும்! அவனுக்கு ஏசி அவமானப்படுத்தி பிரச்சினைபடுறது என்ர நோக்கமில்ல நான் நல்லதொரு டிசிசன் மேக் பண்ணிக் காட்டுறன்!

(விஜி ஹோல் வாசலில் நின்று எட்டிப்பார்த்தபடி)

விஜி : அம்மா யாரோ ஒரு வோய் வாற மாதிரி கிடக்கம்மா! அவனாகத்தான் இருக்க வேணும். (சுஜியும் எட்டிப்பார்த்து விட்டு)

சுஜி : கடவுளே ஹரன்தான்!

(ஹரன் தயங்கியபடி உள்ளே வந்ததும், அப்படியே அசையாமல் நிற்கிறான். ஹரனைக் கண்ட சூரி)

சூரி : சிவா

ஹரன் : சூரி

சூரி : சிவா, நீயா

என்றபடி சூரி ஹரனைக் கட்டித் தழுவி மாறி மாறி முத்தமிடுகிறான் அனைவரும் ஆச்சரியத்துடன் இருவரையும் பார்க்கின்றனர்)

**விஜி :** என்னத்தான்! என்னத்தானிது! சிவா என்றீங்க!

**சூரி :** விஜி என்ர உயிர் நண்பனிவன்! இவண்ட பெயர் சிவஹரன்! சிவா, சிவா எண்டுதான் நான் இவனைக் கூப்பிடுவன்!

**விஜி :** சிவாதான் என்னை சுவீசிக்கு அனுப்பி வச்சான் எண்டு அடிக்கடி என்னட்ட கதைப்பீங்களே!

**சூரி :** பிரச்சினையால நான் இந்தியாவுக்கு அகதியாகப் போனேனே!

**விஜி :** ஓமத்தான்!

**சூரி :** நான் அங்க சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாமல் கஷ்ரப்பட்டன். பிறகு அம்பத்துார் என்ற இடத்தில இவன்ர லோண்றியிலதான் தொழில் செய்தன். இவன் தன்ர சாப்பாட்டையே எத்தனையோ நாள் எனக்குத் தந்திட்டு இவன்..! இவன் பட்டினி கிடந்திருக்கான் சாப்பிட்டியா எண்டு நான் கேட்டால், நான் சாப்பிட்டன் எண்டு பொய் சொல்லுவான்!

(சூரி அழுகிறான்)

**ஹரன்:** ஏன் சூரி அதெல்லாத்தையும் நீ இப்ப சொல்லிற்று!

**சூரி :** சிவா! இங்க ஹரன் எண்டுதான் உன்ர பெயர் அடிபட்டுது. அதால நான் வேற ஒரு வோய் எண்டுதான் நினைச்சன். நான் சுவீசுக்கு போன பிறகு உன்ர தொடர்பே எனக்கு இல்லாம போச்சிது நான் நினைச்சன் நீ, நீ செத்துப்பொயிட்டா எண்டு!

(சூரி மீண்டும் ஹரனை கட்டி அணைத்து அழல்)

**சுஜி :** அத்தான்! அழாதிங்க!

(உமா மௌனமாக நிற்றல்)

**சுஜி :** அம்மா!

**விஜி :** அம்மா ! அம்மா

**சூரி :** அன்ரி!

**உமா :** எனக்கு மூத்த மருமகனாக வசதியான சுவீஸ் மாப்பிள்ள கிடைச்சிருக்கிறார் எண்டு பெருமைப்பட்டுக் கொண்டேன் ஆனால் இண்டைக்கு எண்ட மூத்த மருமகன் சூரிய உருவாக்கிய பெருமகனாக இளைய மருமகன் மிஸ்டர் சிவஹரன் கிடைச்சிருக்கிறார்! மிச்சம் சந்தோசப்படுகிறேன்.

சுஜி : அம்மா! அம்மா!

(சுஜி தாயாரான உமாவை அரவணைத்தல்)

உமா : உங்களுக்கெல்லாம் தெரியுமா? புத்தபெருமானான சித்தார்த்தாருக்கு ஆடு மேய்க்கிற ஒரு பெடியன் குடிக்கிறதிற்கு தயக்கத்தோட பால் கொடுத்திருக்கிறான். சித்தார்த்த அரசன், பெடியன் இடையனிட்ட சித்தார்த்தர் சொன்னாராம்., ஓடும் உதிரத்தில் தேடிப்பார்த்தாலும் சாதி தெரியாதெண்டு. அதன்படி பார்த்தால் மனித இனத்திட குருதிகளெல்லாம் ஒரேயொரு குலந்தான். எனவே "குருதிகளின் குலம் ஒன்றே"

அதனால் மிஸ்டர் சிவஹரன எண்ட இளைய மருமகனாக ஏற்றுக்கொள்றன்

**(திரை)**

# 3

# கௌரவம்

## காட்சி - 01

**கதைக்களம் :** *சிங்கனின் வீடு*

**கதாபாத்திரங்கள் :** *சிங்கன், மாலதி, ரூபா*

**சம்பவம் :** *சிங்கன் ஒழுங்காக வேலைக்குச் செல்லாத கூலித்தொழிலாளி. தினக் குடிகாரன். குடிப்பதற்குக் காசு இல்லாவிட்டால், வீட்டிலுள்ள பொருட்கள் எதையாவது எடுத்துக் கொண்டுபோய் விற்றுக் குடிப்பான். மாலதி சிங்கனின் மனைவி. அயலண்டை வீடுகளுக்குச் சென்று, அரிசிமா இடித்தும், பாத்திரங்களைக் கழுவிக் கொடுத்தும் சிறு ஊதியம் பெற்று சீவனத்திற்கு உதவுபவள். ரூபா இந்தக் குடும்பத்தின் ஒரே மகள். ஆறாம் வகுப்பு படிப்பவள். கெட்டிக்காரி*

**திரை விலக்கம் :** மேடையில் சிங்கனின் வீட்டின் ஓர் அறை காட்சிப் படுத்தப்பட்டிருக்கின்றது.

*(மாலதி தோன்றல்)*

**மாலதி :** என்னைப் படைச்ச இறைவா! இந்தக் குடும்பத்துக்கு ஒரு விடிவுகாலம் வராதா கடவுளே!

*(சிங்கன் வந்த படியே)*

**சிங்கன் :** என்னடி மாலதி! பொழுதுபட்டு விளக்கு வைக்கிற நேரத்தில...! ஆ..! என்னவோ விடியிற, இருள்ற எண்டு கதைக்கிறா! மாலபட்ட நேரத்தில நடு வீட்டுக்க நிண்டு பெருமூச்சு விடுறா! பொழுதுபட்டால் எனக்கு என்ன வேணுமெண்டு உனக்குத் தெரியுந்தானே!

**மாலதி :** எனக்கு மட்டுமா தெரியும்! இந்த ஊராக்களுக்கே தெரியுந்தானே! மாலதிர புருஷன் சிங்கன்! தினக் குடிகாறனெண்டு தெரியுந்தானே!

**சிங்கன் :** சும்மா போ மாலதி! நீ ஊராக்களெண்டு சொல்றியே! அவங்கள்ல சில ஆக்கள் ரகசியமாக குடிக்கிற குடியப்பத்தி உனக்கு எங்கடி தெரியப்போகுது! ஒண்டு என்னெண்டால் அவங்க ரகசியக் குடிகாறர், நான் பப்ளிக்கான குடிகாரன் அவ்வளவுதான்!

**மாலதி :** என்ர தலையெழுத்து! என்னை ஏஎல் படிக்க விட்டீங்களா! எனக்கு முன்னாலயும், பின்னாலயும் திரிஞ்சி, நான் ஏஎல் படிச்சி பாஸ் பண்ணினா, கெம்பசுக்கு போயிடுவன் எண்ட பயத்தில, உங்கட தாழ்வு மனப்பான்மையால என்ர படிப்ப குழப்பிற்றீங்களே! நான் நைன் ஏ எடுத்தும் பிரயோசனமில்லாமல் போச்சே!

**சிங்கன் :** அடியேய்! நானென்ன...! ஆ! எனக்கு இந்த டிஸ்றிக்கில எப்பிடி மதிப்பெண்டு உனக்குத் தெரியாமலா! ஸ்போட்ஸ் ஹன்றட் மீற்றஸ்ல என்ர றெக்கோட்ட ஆரெண்டான இப்ப விறேக் பண்ணச் சொல்லடி பாப்பம்!

**மாலதி :** ஓ! அது அப்ப! இப்ப உங்கட றெக்கோட் என்ன மாதிரி...! ஆ! குடிக்காட்டி உங்கட கையெல்லாம் நடுங்குதே! ஊத்தித் துலையாட்டி, செத்த பாம்பு மாதிரி கிடப்பீங்க! இந்தா! நம்மட பிள்ளை ரூபா பார்த்திருக்க வளர்ந்திட்டு வாறாள்!

**சிங்கன் :** சரி! சரி! ரைமாச்சு! வாறப்பூட்டிருவானுகள்! என்னெண்டாலும் தா!

**மாலதி :** என்னட்ட ஒரு சதமுமில்ல. இந்தா ஒரு சோறும், சொதியுந்தான் இரவைக்கு! என்ர பிள்ளை ரூபா நல்ல ருசியான கறியோட சாப்பிட்டு எத்தன நாளாச்சு! நீங்க குடிக்கிற காசு போதுமே நம்மட பிள்ளைக்கு நல்ல சாப்பாடு கொடுக்க!

**சிங்கன் :** சரி! சரி! காசில்லாட்டி பரவாயில்ல! அந்த டோச் லைட்ட எடுத்திட்டு வா!

**மாலதி :** இதேன் என்ர கையால எடுத்துத்தர! மற்றச் சாமனுகள ஒண்டொன்டாக தூக்கிக் கொண்டுபோய் வித்துக் குடிச்சமாதிரி இதயும் கொண்டுபோய் வித்துக் குடிக்கிறதானே!

(சிங்கன் உள்ளே போய் டோச் லைட்டை எடுத்துக் கொண்டு போக ஆயத்தமாகின்றான்)

மாலதி எல்லாத்தையும் வித்தாச்சு! இனிமேல் நான் மட்டுந்தானே கிடக்கிறன்! என்னையும் கொண்டுபோய் ஆருக்கெண்டாலும்...!

**சிங்கன் :** என்னடி! கதைக்கிறாய்! ம்!

(கையில் வைத்துள்ள டோச் லைட்டால் மாலதியை அடிப்பதற்கு ஓங்குகின்றான்)

மரியாதை! மரியாதய மெயின்ரெண்ஸ் பண்ணு ! யூ அண்டஸ்ராண்ட்!

மாலதி : இந்த இங்கிலீசவிட இவருக்கு வேற ஒண்டுமே வாயில வராது! கதைக்கிறார் இங்கிலிஸ்! பெரிய வெள்ளைக்காறன் எண்ட நினைப்புத்தான்!

(அப்போது ரூபா கையில் பார்சல் ஒன்றுடன் வரல்)

சிங்கன் : ரூபா! என்ன மகள் பார்சல் ஒண்டு கொண்டு வாறீங்க!

ரூபா : அப்பா! எங்கட ஸ்கூல்ல பிறைஸ் கிவிங் நடக்கப் போகுதப்பா!

சிங்கன் : எப்ப மகள்!

ரூபா : இன்னும் த்திறீ டேய்ஸ் இருக்கப்பா! எனக்கு றிலிஜன், தமிழ், மெற்ஸ், சயன்ஸ், இங்கிலீ' எல்லாப் பாடங்களிலயும் மற்றதப்பா ரெகுலறா ஸ்கூலுக்கு போனதிலயும் பிறைசஸ் இருக்கப்பா!

சிங்கன் : மாலதி பிள்ளட கதைய கேட்டியா! ஆரு! சிங்கண்ட சிங்கக்குட்டி என்ர மகள்

ரூபா : அப்பா! ரீச்சர் சொன்னா! எல்லார்ர பேரண்ட்சையும் வரட்டாமெண்டு.

சிங்கன் : கெட்டிக்காரி! கெட்டிக்காரி என்ர மகள்! தாங்கமகள்! பார்ஸல என்னெண்டு பார்ப்பம்!

(சிங்கன் பார்சலைத் திறந்து பார்த்தல்)

சிங்கன் : என்ன! வடிவான ஸ்கேர்ட்டா இருக்கு மகள்!

மாலதி : அந்த ரீச்சர் நம்மட கஷ்ட நிலையைப் பார்த்து, மனமிரங்கி வாங்கித் தந்திருக்கா!

சிங்கன் : மாலதி! இதிர விலை எவ்வளவு இருக்குமெண்டு நினைக்கிறாய்!

மாலதி : என்னட்டயா கேக்கிறீங்க! நாம உடுப்பு வாங்க புடவைக் கடைகளுக்குப் போய் எப்பிடியும் ரெண்டு மூன்று வரு'ங்களுக்கு மேலதான் இருக்கும். நமக்கென்ன இதுகள்ர விலை தெரியப் போகுது!

சிங்கன் : சரி மகள்! ஸ்கேட்டக் கொண்டுபோய் உள்ள வை!

(ரூபா ஸ்கேர்ட்டை உள்ளே வைப்பதற்காக கொண்டு செல்கையில் சிங்கன் அதனைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.)

மாலதி : என்ன பிள்ள ஸ்கேர்ட்டக் கொண்டு உள்ள போறத கவனமாகப் பார்க்கிறீங்க!.. சரிதான்..!

**சிங்கன்** : என்னடியது! சரிதான் எண்டு சொல்றா!

**மாலதி** : என்னத்தச் சொல்லித்தனிப்ப! சரிதான்! எண்டு மட்டுந்தானே சொன்னன்.

**சிங்கன்** : இல்லல்ல! மானுக்கு எய்த அம்பு பற்றைக்கு படுற மாதிரி எண்டு சொல்லுவாங்களே!

**மாலதி** : இஞ்ச மானுமில்ல, அம்புமில்ல, பற்றையுமில்ல! வீரமில்லாத சிங்கமொண்டுதான் இஞ்ச குடியில்லாட்டி நடுங்கிப்போய் கிடக்கு!

(சிங்கன் டோச் லைட்டை ஒண் பண்ணி மாலதியிடம் காட்டி)

**சிங்கன்** : இஞ்ச பாரு மாலதி! இந்த டோச் லைட் மாதிரி சிங்கன் எண்டைக்குமே பவறான ஆள்தான்! சரி! நேற்றைப்போல கேற்றப் பூட்டி வைச்சிராத!

**(திரை)**

## காட்சி - 02

**கதைக்களம் :** சிங்கனின் வீடு

**கதாபாத்திரங்கள் :** ரூபா, மாலதி

**சம்பவம் :** பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கு முதல் நாள் பரிசுகள் எடுக்கவுள்ள ரூபா ஒத்திகைக்குப் போவதற்காக தனது தாயாரான மாலதியுடன் உரையாடுகிறாள்.

**ரூபா** : அம்மா! ரைம பாருங்கம்மா செவணாப்போச்சு!

**மாலதி** : இஞ்ச பாரு! தந்த ரெண்டு துண்டு பாணிலயே ஒரு துண்ட வச்சிட்டீங்க என்ன!

**ரூபா** : எனக்கு போதுமம்மா! வயிறு நிரம்ப சாப்பிட்டா நான் எப்பிடி ஸ்கூலுக்கு நடந்து போறதம்மா!

**மாலதி** : கனக்க சாப்பிடுற ஆள் மாதிரி கதைக்கிறா!

**ரூபா** : இந்தாங்க சீப்பு...

(மாலதி ரூபாவுக்கு தலைவாரிக் கட்டிக்கொண்டிருக்கையில்)

**ரூபா** : அம்மா! அம்மா! நாளைக்கு பிறைஸ் கிவிங்கிற்கு கட்டாயமாக நீங்களும் வரவேணுமம்மா!

மாலதி : சரி மகள்! நீங்க பிறைஸஸ் வாங்கிறத பார்க்க அம்மாக்கு சரியான விருப்பந்தான்! என்ன செய்யிற! அங்க ஆக்களுக்குள்ள உடுத்து வாறதுக்கு நல்ல சாறியில்லையே மகள்!

ரூபா : என்னம்மா! எல்லாப் பிள்ளைகள்ர பேரண்ஸ்சும் வருவாங்கம்மா!

மாலதி : சரி! நீங்க இந்த முறை போய் பிறைஸஸ்ல எடுங்க! நீங்க கெட்டிக்காறிதானே! அடுத்த முற அம்மா கட்டாயம் வருவன்!

ரூபா : மற்றதம்மா! இண்டைக்கு பிறைஸ்கிவிங் றிஹசல்ஸ்ஸுக்கு வரக்குள்ள போட்டோஸ் எடுக்க காசு அற்வாண்ஸ்சாக கொடுக்க வேணுமாம்மா! கழுத்தில சின்ன செயின் இருந்தால் போட்டு வரட்டாமம்மா!

மாலதி : ம்! ம்!

(மாலதியின் கண்கள் கலங்கி கண்ணீர் துளிகள் ரூபாவின் மீது விழுகிறது)

ரூபா : என்னம்மா! என்னவோ தண்ணீர் போல சொட்டு சொட்டாக என்னில இந்தா பாருங்கம்மா...!

(என்றவள் தாயின் முகத்தைப் பார்க்கிறாள் மாலதியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிகின்றது)

ரூபா : அம்மா! அம்மா! அழாதீங்கம்மா! எந்த நாளுந்தானே அம்மா நீங்க அழ்றீங்க! ஏனம்மா உங்களுக்கு மட்டும் இந்த நிலை! சும்மா அழாதீங்கம்மா! நான் இருக்கிறன்தானேம்மா!

மாலதி : பெரிய மனுசி மாதிரிப் பேசப்பழகிட்டாயென்ன!

(சிங்கன் வருதல்)

சிங்கன் : ஸ்கூலுக்குப் போற பிள்ளைக்கு இப்ப தான் தலை கட்டிவிடுறாயென்ன!

ரூபா : முடிஞ்சப்பா!

சிங்கன் : சரி மகள்

மாலதி : ரூபா, எந்தப் புறோக்கிறாமுக்கும் றிஹர்சல்ஸ்தான் முக்கியம்! ரீச்சர்ஸ் சொல்றத கவனமாக கேட்கவேணுமென்ன!

ரூபா : ஓமம்மா

மாலதி : சரியம்மா கவனமாக போயிட்டு வாங்க

ரூபா : அம்மா வாய்! அப்பா வாய்!

(திரை)

# காட்சி - 03

**கதைக்களம் :** பாடசாலையின் பரிசளிப்பு விழா மண்டபம்

**கதாபாத்திரங்கள் :**

பிரதம அதிதி, பாடசாலை அதிபர், ஆசிரியைகளான ஜூடி, நிரோ, மாணவி ரூபா, ரூபாவின் தந்தை சிங்கன்

**சம்பவம் :** மேடையில் பரிசளிப்பிற்கான நிலையில் மேசை ஒன்றின் மீது விருதுகளும், சாதனைக்கான கிண்ணங்களும் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

(பிரதம அதிதி, ஏனைய அதிதிகளுக்கான ஆசனங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன அறிவிப்பாளராக ஜூடி ஆசிரியை ஒலி வாங்கிக்கு முன்பாக நின்றபடி)

**ஜூடி :** முதல்முதலாக இறைவனை வணங்கியபடி அனைவருக்கும் இந்நேர வணக்கத்தினைத் தெரிவித்துக்கொண்டு இன்னும் சில நிமிடங்களில் பிரதம அதிதி அவர்களின் வருகையுடன் எமது பரிசளிப்பு விழா ஆரம்பமாகும் என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**நிரோ :** எக்ஸ்கியூஸ் மீ ஜூடி மிஸ்

**ஜூடி :** சொல்லுங்க நிரோ மிஸ்

**நிரோ :** நேற்றும் றிஹஸல்ல எல்லாருமே நீற்றா உடுத்து வரவேணும் எண்டுதானே சொன்னனாம!

**ஜூடி :** ஓமோம்! அதுக்காகத்தானே மீடியா, எல்லாம் வாறதால பேரண்ஸ்ஸிட விருப்பத்தோட யூனிபோமில இல்லாம கலர்ஸ்ஸோட வரலாம் எண்டு சொன்னம்.

**நிரோ :** அங்க பாருங்க! கொஞ்சம்! ஸ்ரேஜ்ஜில நிண்டபடியே எட்டிப் பாருங்க! ரூபா வந்திருக்கிற கோலத்த!

(ஜூடி ஆசிரியை மேடையின் முன்னால் நின்று எட்டிப் பார்த்தல்)

**ஜூடி :** என்னப்பாயிது! நான் அவளுக்கு நல்ல ஸ்கேர்ட் ஒண்டு குடுத்தனானே!

**நிரோ :** எப்ப குடுத்தீங்க!

**ஜூடி :** ரூ டேய்சுக்கு முன்னாடி...

நிரோ : சரிதான்!

ஜூடி : என்ன சொல்றீங்க மிஸ்!

நிரோ : ரூபாட அப்பா டெய்லி றிங் பண்றவராம்! காசி இல்லாட்டா வீட்டில இருக்கிற எதெண்டான எடுத்துக் கொண்டுபோய் வித்துப்போட்டு றிங் பண்ணுவாராம்! அப்பிடியான ஆள் நீங்க கொடுத்த அந்தப் புது ஸ்கேர்ட்டையும் வித்து றிங் பண்ணியிருப்பார்.

ஜூடி : இப்பிடியும் மனுசனுகளா! ஒருக்கா! சைற்ல நிண்டு ரூபாவ வரச் சொல்லி கையால காட்டுங்க மேடையில் பக்கத்துக்கு சைற் ரூபா வரட்டும்.

(நிரோ மேடையில் நின்றபடி மேடைக்கு முன்னால் அமர்ந்திருந்த ரூபாவை வரும்படி சைகை காட்டுகிறாள்)

(ரூபா மேடையினுள் ஒரு பக்கமாக வந்ததும்)

ஜூடி : ரூபா! எங்கம்மா நான் உமக்குத் தந்த ஸ்கேர்ட்!

(ரூபா எதுவும் பேசவில்லை கண்களைக் கசக்கியபடி நிற்கிறாள்)

நிரோ : ரூபா! ரீச்சர் கேட்கிறாதானே சொல்லன்! சொல்லுபிள்ள எங்களுக்கு ரைம் வந்திற்று!

ரூபா : அத... அத ரீச்சர்! அப்பா எடுத்திற்று கொண்டு போனாராமெண்டு அம்மா சொன்னா!

நிரோ : நான் உங்களிட்ட இப்ப சொன்னன் தானே ஜூடி மிஸ்! அந்தாள் கொண்டு போய் வித்துக் குடிச்சிருப்பான் பாவி!

ஜூடி : இப்ப என்ன செய்யிற சீப் கெஸ்ட் இப்ப வந்திருவார்.

நிரோ : அதுதானே மிஸ்! எல்லா பாடங்களிலயும் ரூபாக்கு பிறைஸன் இருக்குதே! சனம் என்னத்த நினைக்கப் போகுது! இந்த ரீச்சர் மாருக்கு கண் இல்லியா இந்தக் கோலத்தில இந்தப் பிள்ளைய மேடையில ஏத்தி புதினம் பார்க்குதுகள் எண்டு... சீ..

ஜூடி : நிரோ மிஸ்! எதுக்கும் நீங்க யோசியாதீங்க!

பிரதம அதிதி வருதல்

ஜூடி : அன்பார்ந்தவர்களே! எமது பிரதம அதிதி அவர்களுக்கு, எமது பாடசாலை அதிபர் அவர்கள் மாலை அணிவித்து இப்போது வரவேற்பார்.

(பிரதம அதிதி மேடைக்கு வந்ததும் அதிபர் மாலை அணிவித்து வரவேற்பதற் முன்பதாக அங்கு ஜூடி ஆசிரியையிடமிருந்த ஒலி வாங்கியை வாங்கினார். அனைவரும் பார்த்தபடி உள்ளனர்.)

**பிரதம அதிதி :** அனைவருக்கும் வணக்கம்! நான் இந்த மைக்கைப் பெற்றதும் ஆச்சரியத்துடன் இருக்கின்றீர்கள் உண்மைதான்!

**அதிபர்** : சேர்! நீங்க..!

**பிரதம அதிதி :** அங்க இந்த ஹோல்ற மெயின் வாசல்ல பாருங்க

(மேடையில் இருந்த ஏனையோர் பார்த்தபடி ஒன்றும் புரியாதவர்களாக நிற்கின்றனர்)

**பிரதம அதிதி :** மிஸ்டர் சிங்கன் அவர்களை நான் இந்த ஸ்ரேஜுக்கு வரும்படி அழைக்கின்றேன்... மிஸ்டர் சிங்கன் வாங்க! வெட்கப்படாம இந்த ஸ்ரேஜ்ஜில வந்து நில்லுங்க

(எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்க்க சிங்கன் மேடையில் வந்து நிற்கின்றார்)

**பிரதம அதிதி :** இதோ இருக்கிற சிங்கன் என்ன செய்தார் தெரியுமா! தனது மகள் ரூபாவுக்கு கிடைச்ச புது ஸ்கேர்ட்டை, எங்கட ஒப்பிசுக்கு வந்து அகதிகளுக்கான பொருட்கள் சேகரிக்கும் பிரிவில கொண்டு வந்து நேற்று ஒப்படைத்தார். இவர் எங்களிட்ட தந்த ஸ்கேர்ட்ற பெறுமதி கிட்டத்தட்ட மூவாயிரம் ரூபாய் இருக்கும்! எனவே இப்படியான உயர்ந்த உள்ளம் கொண்ட சிங்கன் அவர்களே இந்த நிகழ்ச்சியின் பிரதம அதிதி என நான் இவருக்கு மாலை அணிவித்து இவரை கௌரவப் படுத்துகின்றேன். இந்த நிகழ்வானது உலகம் முழுவதும் யூரியூப், பேஸ்வுக், ஜீரீ மூலமாக எல்லாரும் சிங்கன பார்ப்பாங்க! இதோட சிங்கன்ட குடும்பம் உயர்வடைய வாழ்த்துகிறேன்.

**(திரை)**

4

# இரக்கம்

## காட்சி - 01

**கதைக்களம் :** தனியார் வைத்தியசாலை.

**மேடை அமைப்பு**

**சம்பவம்** : தனியார் வைத்தியசாலையில் ஓர் அறை மேடையில் காட்சி அமைப்பாகிறது. டாக்டருக்கான மேசை. நோயாளிகளுக்கு பிறஸர் கணக்கீட்டுக் கருவி டோச் லைட் என்பன. நேர்ஸ் ஒருத்தி அந்த மேடையின் பக்கவாட்டில் நின்றபடி

**நேர்ஸ்** : நம்பர் எட்டு! எட்டாம் நம்பர் செபஸ்தியான் பிள்ளை! (என்று நேர்ஸ் கூப்பிட்டதும் நோயாளியான செபஸ்தியான் பிள்ளை வருதல்)

**டாக்டர் இசுறு :** ஆ! வாங்க செபஸ்தியான் புல்லே!

**செபஸ்தியன்** : ஓமையா!

**டாக்டர்** : இருங்கோ..! இப்பே எப்புடி!

**செபஸ்தியான் :** ஓமையா!

**டாக்டர்** : இருங்கோ !

**செபஸ்தியன்** : அண்டைக்கு உங்கட்ட காட்டிட்டுப் போய், தந்த நாலுசாதிக் குளிசைகள் எல்லாத்தையும் விழுங்கினனான் ஐயா!

**டாக்டர்** : அதூக்கு சரியில்லேய்!

**செபஸ்தியன்** : இல்லையா! சரியா கஷ்டப்படுறன்! சலம் சொட்டுச் சொட்டாத்தான் போகுது! எப்பிடியும் ஒரு அஞ்சு பத்து நிமிஷமெண்டாலும் புடிக்குமையா! தலப்பில எரியுது! இனி! மூத்திரம் முடிக்கி எழும்பித்துப் போறத்துக்கிடையில சாறன்கீறனெல்லாம் நனைஞ்சு போகுதையா! பெரிய சங்கக் குறைவா கிடக்கையா!

**டாக்டர்** : சரி! உங்களுக்கு இரிக்கிறதூ புறஸ்ரேஜ் தானே! இதூக்கு ஒரு சின்ன சேஜரி செய்ய வேணும்! அதிங் செய்தா சொகம் வரும்!

**செபஸ்தியன்** : என்னவாம் புள்ள!

நேர்ஸ் : அதய்யா! உங்களுக்கு சின்னதொரு ஒபறேசன் செய்ய வேணுமென்டு சேர் சொல்றார்!

செபஸ்தியன் : என்ன புள்ள! ஆணுடம்ப வெட்டிக் கிழிச்சா எண்ணடம்மா சலம் போற!

நேர்ஸ் : அதுக்கெல்லாம் கதிற்றர் போடுவாங்கய்யா!

செபஸ்தியன் : எனக்கெண்டா ஒண்டுமே விளங்கல்லம்மா! எப்பிடியும் இத துலைக்கோணும் தாயே!

டாக்டர் : நீங்க பயப்படாதீங்க! அந்த சேர்ஜறி இங்க செய்ய சாமானம் இல்லேய்! பெரிய ஹொஸ்பிடலுக்கு வாங்கோ! நாமே சிற் தாறது! இந்தாருங்கோ சிற்!

(டாக்டர் சிற் எழுதிக் கொடுத்ததும்)

செபஸ்தியன் : சரி ஐயா! நான் கட்டாயம் வாறனையா!

(திரை)

## காட்சி - 02

கதைக்களம் : போதனா வைத்தியசாலை

கதாபாத்திரங்கள் : செபஸ்தியன்பிள்ளை, நேர்ஸ், அற்றன்டன்ட், டாக்டர்

சம்பவம்,

காட்சியமைப்பு : மேடையில் போதனா வைத்தியசாலையின் ஓர் அறை அமைந்திருத்தல். அற்றண்டன்ட் ஒருவர் நோயாளிகளின் வரவைப் பார்த்தபடி அந்த அறையின் ஓரமாக நிற்கிறார். அவ்வேளை செபஸ்தியான்பிள்ளை உள்ளே வந்து,

செபஸ்தியன் : தம்பி! இசுறு டொக்டர் வருவார் தானே!

அற்றன்டன்ட் : ஓமையா! அடுத்த றூமில நிற்கிறார். இப்ப வந்திடுவார். நீங்கதானே செபஸ்தியான்பிள்ளை!

செபஸ்தியன் : ஓம் தம்பி.

அற்றன்டன்ட் : இப்ப எப்பிடி ஐயா! போட்ட வேக் எல்லாம் கழட்டியாச்சு என்ன!

செபஸ்தியன் : அதென்ன தம்பி! பூனைக்குட்டிய கட்டியுட்ட மாதிரி கொண்டு திரிஞ்சி பறகு, எடுத்துப் போட்டாங்க!

அற்றன்டன்ட் : இப்ப எப்பிடி ஐயா யூறின் போகுது!

செபஸ்தியன் : அதென்ன தம்பி! பைப்பால தண்ணிபோற மாதிரி, சும்மா சலசலண்டு போகுது! அதுதான் இந்த டொக்டரிட்ட சொல்லித்து போகவேணும் தம்பி!

(டாக்டர் இசுறு வருதல்)

டாக்டர் : செபஸ்தியான்புல்லேய்! எப்பிடி நல்லம் என்னா!

செபஸ்தியன் : ஓமையா! கடவுளபோல நீங்க எண்ட வருத்தத்த சுகமாக்கிப் போட்டீங்க. உங்களுக்கு புண்ணியங் கிடைக்குமையா!

(செபஸ்தியன்பிள்ளை டாக்டர் இசுறுவைக் கும்பிடுதல்)

டாக்டர் : இதிங் என்னது! இதிங் எல்லாம் வேணாம்! இனி பிரச்சினய் இல்லேய்!

செபஸ்தியன் : ஓமையா! அதுதான் உங்களிட்ட வந்தனான்!

(செபஸ்தியான்பிள்ளை ஒரு என்வலப் கவரை எடுத்து டாக்டரிடம் கொடுக்கிறார்)

டாக்டர் : என்னாயிது! இதிங் காசு என்னாத்துக்கு!

செபஸ்தியன் : இல்லையா! நான் அங்கையும், இஞ்சையும் அலைஞ்சி திரிசனான்! எவ்வளவு காசைத்தான் கொட்டித்தன்! அது போகட்டுமையா! இப்ப நான் உங்களுக்கு ஒரு சந்தோஷம் செய்ய வேணுமையா!

(டாக்டர் இசுறு சிரித்தல்)

என்னாயிது ! இதிங் பத்தாயிரம் வச்சி இரிக்கிறதூ! இதப் புடியுங்கோ!

செபஸ்தியன் : ஐயா!

டாக்டர் : புடியுங்கோ நான் சொல்றத கேலுங்கோ! இஞ்ச வாங்கோ

(டாக்டர் செபஸ்தியான்பிள்ளையை ஒரு ஜன்னல் ஊடாக சுட்டிக்காட்டி)

டாக்டர் : எட்டிப் பாருங்கோ!

(மேடையின் முன்பக்க விளிம்பில் நின்றபடி டாக்டர் கையைக் காட்டுகிறார். செபஸ்தியான்பிள்ளையும் டாக்டர் காட்டிய திசையைப் பார்த்தபடி நிற்கிறார்)

டாக்டர் : உங்களுக்கு, என்ர காரு தெரியும் தானே!

செபஸ்தியன் : ஓமையா! சிவப்பு நிறக் காறையா!

டாக்டர் : நான் சொல்ரத கேலுங்கோ! என்ர அப்பாக்கு ரெண்டு பெரிய கப்பல் ஓடுது. அதிங் ஜப்பான், சைனா, இந்தியா அங்கேயிங்கே போறதூ! அதிலே அப்பா கார் இம்போர்ட் பண்றது அதிங் என்னா...

அற்றனடன்ட் : காற இறக்குமதி செய்யிற!

செபஸ்தியன் : மெய்தானா ஐயா!

டாக்டர் : நாமே இண்டைக்கூ கொண்டு வந்தது சுது! வெல்லேய் கார்! அதிங்தான் அங்கே நிக்குதூ! சரி!

செபஸ்தியன் : ஓமையா அண்டைக்கு சிவப்பு காறில வந்தீங்க இண்டைக்கு வெள்ளைக் காறில வந்திருக்கிறீங்க!

டாக்டர் : அதிங்தான்! நமக்கு ஒவ்வொரு கெலமயும் அப்பா ஒரு காரு தாறதூ மடகலபுவ, பொறகு திருகோணமலே இப்பிடி ஓடி, எஞ்சின நாம செக் பண்றதூ! சரி!

செபஸ்தியன் : என்ன புதினமையா இது!

டாக்டர் : பிறைவேற் ஹொஸ்பிரல்ஸ் எண்டா காசு கட்டத்தான் வேணும் ! அங்க லேவசாஜ் இருந்தூ எல்லாருக்கும் சார்ஜ் ! பொறகு வாட்றூம் சார்ஜ் ! இதிங்தான் வேற ஒண்டுமில்லேய்! இங்கே எல்லாமே நாம பிறியாக செய்யிறதூ!

செபஸ்தியன் : ஓமையா! நீங்க எனக்கு செஞ்ச பிறகு பத்தாம் வாட்டில் கிடந்தனான்!

டாக்டர் : இஞ்ச பாருங்க செபஸ்தியான்புல்லேய்! வடக்கூ, கெலக்கூ பிரச்சனைபட்ட இடம் என்னா!

செபஸ்தியன் : ஓமையா!

டாக்டர் : அதிங்தான்! நாமே தமில் மக்கலுக்கு சேவை செய்ய நாம வாறதூ! இல்லாட்டி நாம கொலம்ப, கண்டி அங்கே வேலய் செய்ய முடியும். சரி. எனக்கு காசு வேணாம்! நன்றி !

செபஸ்தியன் : ஐயா! உங்கட மனசில இருக்கிற இரக்கம் எல்லாரிட்டயும் இரிக்கவேணுமையா! நீங்க நல்லாயிருப்பீங்க!

(திரை)

# 5

# கடையாணி

## காட்சி - 01

**கதைக்களம் :** கஸ்டப்பிரதேசப் பாடசாலைக்கு முன்பாக உள்ள பஸ் ஹோல்ட்டிங் பிளேஸ்

**கதாப்பாத்திரங்கள் :** சசி ரீச்சர், சந்திரன், சீனு

**சம்பவம் :** *பாடசாலை முடிவடைந்து ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஆயத்த வகுப்பினை கற்பித்த சசி ரீச்சர் பி.ப.4.00 மணியாகியும் தனது வீட்டிற்குப் போக பஸ் இல்லாமல் காத்துக் கொண்டிருத்தல்.*

*அவ்வேளை, அப்பாடசாலையின் பழைய மாணவனான சந்திரன் வருகிறான். சந்திரனிடம் ரீச்சர்!*

**சசி** : *சந்திரன்*

**சந்திரன்** : *ஓம் ரீச்சர் ! சொல்லுங்க !*

**சசி** : *எனக்கொரு ஹெல்ப் பண்ணுங்களன்!*

**சந்திரன்** : *என்ன ரீச்சர்*

**சசி** : *ஸ்கூல் முடிஞ்சி ஸ்கொலசிப் பிள்ளைகளுக்கு கிளாஸ் எடுத்திட்டு வந்தனான், இந்தா பஸ் இல்லாம கிடக்கு !*

**சந்திரன்** : *அதுதானே ரீச்சர் ! இந்தா ரைமும் நாலாகப் போச்சு !*

**சசி** : *ஓம் சந்திரன் நான் வற்றிக்கலோ ரவுணுக்குப் போக வேணுமே! செங்கலடி ஜங்சனுக்குப் போனா, அங்கிருந்து வஸ்ஸ ஈசியாக எடுத்திடலாம்.*

**சந்திரன்** : *ஓம் ரீச்சர்*

**சசி** : *அதுதான் என்னைக் கொண்டு போய் செங்கலடி ஜங்சன்ல விடுறீங்களா?*

**சந்திரன்** : *ரீச்சர் என்னட்ட மோட்டர்வைக் இல்லையே சசி ரீச்சர் !*

**சசி** : *பரவாயில்ல சந்திரன் ! என்னை உங்கட புஸ் வைக்கல கொண்டுபோய் விடுங்களன்.*

**சந்திரன்** : *ரீச்சர் என்னட்ட சைக்கில் கரியலும் இல்லையே !*

**சசி** : *நான் ! சைக்கில் முன் வாரில் இருப்பன் ! பிளீஸ் சந்திரன்*

யோசிக்காதிங்க! உங்கட வீடு பக்கத்துலதானே ! போய் வைக்க எடுத்திட்டு வாங்களன் பிளீஸ் ! போவம் !

(அவ்வேளை சந்திரனின் நண்பன் சீனு என்பவன் வருதல்)

சீனு : என்ன சசி ரீச்சர் யோசிக்கிறீங்க !

சசி : நான் வீட்டுக்குப் போக வஸ் இல்லாம இருக்கு சீனு ! அதுதான் !

சந்திரனோட செங்கலடி ஜங்சனுக்குப் போகலாமெண்டு !

சீனு : சந்திரனிட்ட மோட்டவைக் இல்லையே ரீச்சர்! என்னட்ட மோட்டவைக் இருக்கு!

சசி : ஸொறி சீனு! சந்திரன் தன்ர புஸ்வைக்ல ஏத்திக்கொண்டு விடும்

சீனு : சைக்கிள்யா! இவன்ர சைக்கில்ல கரியலும் இல்லையே! நீங்க போறதெண்டால் முன்னால வாறில இருந்துதானே போக வேணும்! நீங்க ஒரு ரீச்சர்! இவன் இந்தா சாறனோட நிக்கிறான்! சனத்துக்குள்ளால எப்படி போகப் போறீங்க!

சசி : அதுக்கு என்ன செய்யிற சீனு! எப்படியும் ஒரு ஆறு கிலோ மீற்றர் எண்டாலும் சந்திரன் என்னை ஏற்றிக் கொண்டு போகவேணுமென்ன!

சீனு : என்னெண்டாலும் நம்மட முதிரைக்கண்டடி ஏத்தம் இருக்கே! அதால போறெண்டா சைக்கிள்ல எழும்பி நிண்டபடிதான் மிதிச்சிப் போக வேணும் உங்களுக்குத்தான் கஷ்டமாயிருக்கும்!

சசி : சீனு! சந்திரனுக்கு நல்ல ஸ்மாட்டான வொடிதானே ! சந்திரன் மனேஜ் பண்ணிடும்.

சீனு : சந்திரா என்னடா ! ரீச்சர கவனமாக கொண்டு சேர்ப்பியாடா?

சசி : வாங்க சந்திரன் போவம்!

(திரை)

## காட்சி 02

**கதைக்களம் :** சந்திரனின் வீடு

**கதாப்பாத்திரங்கள் :** சந்திரன், சந்தணம், சீனு

**சம்பவம் :** சந்திரன் தனது தலைமுடியை வாரிக்கொண்டிருக்கிறான்.

அவனது தாய் சந்தணம் அவனைக் காலைச் சாப்பாடு சாப்பிட அழைக்கின்றாள்.

**சந்தணம்** : அடேய் சந்திரா!

**சந்திரன்** : என்னணையது!

**சந்தணம்** : விடியவும் திண்றதுக்கு இந்தா தண்ணிச் சோத்தையும், தயிரயும் எடுத்து வச்சித்து இருக்கிறன் !

**சந்திரன்** : கொஞ்சம் பொறுகா ! என்ன கிடந்து கத்துறா! வாறனே!

**சந்தணம்** : நானுந்தான பாத்துத்து குந்தித்து இருக்கிறன் ! எப்படா நீ தல இழுத்து முடியிற நாளெப்ப எண்ட வேல வட்டிய பாக்கிற !

**சந்திரன்** : இந்தா வாறண்ணை !

**சந்தணம்** : அதென்னடா ! உண்ட தல கிடக்கிற கோலம் முள்ளம் பன்டிர முள்ளு சிலித்தமாதிரி கிடக்கு.

**சந்திரன்** : அதுகா ஜெல்லு! ஜெல்லு வச்சிரக்கன்! இப்பத்தைய ஸ்ரைலு இதுதான்! நீ படம் பார்த்தாத்தானே உனக்கு தெரியப் போகுது! சூரியா, விஜய் எல்லார்ர மயிரும், என்னமாதிரி எழும்பித்து நிக்குதெண்டு தெரியுமாகா, உனக்கு!

**சந்தணம்** : போச்சிது போ ! கொஞ்சம் பொறுடா ! உனக்கு மொட்டை வழிப்பனெண்டு நேத்திக்கடன் வச்சிரிக்கன். இந்தா வாற பூரணைக்கு வழிக்கிற வழிக்கிறதான்

**சந்திரன்** : இந்தா சொல்லிப் போட்டன்! அதெல்லாம் அந்தக் காலமம்மா!

**சந்தணம்** : இஞ்ச பார்ரா சந்திரா! அந்தக் காலத்தில இருந்த சாமிதான் இந்தக் காலத்திலயும் இரிக்கி! அதுகள் ஒரு நாளும் மாறாது! நீங்கதாண்டா மாறிப்போறியள்! சாமிய ஏமாத்த நினைச்சா அவ்வளவுதான்!

**சந்திரன்** : அம்மோவ்! எப்பிடியணை இரிக்கி! ஜெல்லு!

**சந்தணம்** : என்னெண்டாலும் பரவால்ல நல்லாத்தான் கெடக்கு!

**சந்திரன்** : ஏங்கா? உன்னோட ஒத்த பணிக்கப்போடியார் பொண்டில்ர தல என்னம்மா நரைச்சிக்கிடந்தது இப்ப அந்த மனிசி டை அடிச்சி கறுங்குறுமெண்டு இரிக்கி ! நீயும் அடியன்!

**சந்தணம்** : உனக்கு சோப்புவன் விளக்குமாறால !

(அவ்வேளை சீனு வருதல் )

சீனு : சந்தணமாமி!

சந்தணம் : வாங்க மருமகன்

சீனு : என்ன மாமி சந்திரன் மச்சானுக்கு என்னமோ விளக்குமாறால சோப்புற கதை கதச்சீங்க!

சந்தணம் : அது பொடியா இவனுக்கு ஒரு கதைக்குச் சொன்னனான். எண்ட இளந்தாரிப் புள்ளைக்கு விளக்குமாறால எப்பிடி சோப்புற!

சீனு : இல்ல மாமி! இவனுக்கு நீங்க சோப்புற வேலையொண்டு கிட்டடியில நடக்கத்தான் போகுது !

சந்திரன் : என்னடா சீனு ! நீ என்ன சொல்றா!

சீனு : றோட்டால வந்தவனுகள், நீ சசி ரீச்சர சைக்கிள்ள முன்னால ஏத்திற்று போன வடிவச் சொன்னானுகள்

சந்தணம் : என்ன மருமகனது!

சீனு : இல்ல மாமி ! இவன் சந்திரன், அந்த சசி ரீச்சர வாரில ஏத்திட்டு போனவனாம்

சந்தணம் : மெய்தானாடா சந்திரா!

சந்திரன் : ஓங்கா! சீனு பொய் சொல்ல மாட்டானே! நான் ஏத்திற்றுத்தான் போனன்.

சந்தணம் : சரி ஏத்திட்டு போற சரி! அதுகள கொண்டுபோய் உழுத் தாட்டிராத! என்ன செய்யிற ஆத்திர அவசரத்துக்கு ஆருக் கெண்டான உதவி செய்யத்தானே வேணும்! நம்மட பக்கம் வசி வாற கொறைவுதானே! நான் வாறன் அஞ்சாறு கொள்ளிக்கம்பு முறிச்சித்து..

(சந்தணம் போகின்றாள்)

சீனு : சந்திரா நீ வார்ல வச்சி சசி ரீச்சர ஏத்திற்று போக்க உனக்கு என்னமா இருந்தது!

சந்திரன் : என்னம்மா எண்டா!

சீனு : இல்லல்ல! களைப்பா இருந்திருக்குமே!

சந்திரன் : சீனு! நானென்ன உன்னப்போல தண்ணியடிச்சி, சிக்கிறட்டு குடிச்சி, நிசாம்பாக்குச் சப்பி, கஞ்சா அடிச்சி உடம்ப பழுதாக்கியா வச்சிருக்கனா!

சீனு : அதவிடு! முதிரக்கண்டடி ஏத்தத்தால எப்பிடி, ரீச்சரையும் ஏத்திட்டு எழும்பி நிண்டுதானே சைக்கிள மிரிச்சிப் போயிருப்பா!

சந்திரன் : அதெப்படிடா! அது ஒரு பொம்புளப்புள்ள எலுவாடா! நமக்கு மரியாத இல்லாம அத ஏத்திட்டு உரஞ்சி, உரஞ்சி கொண்டு போறதா, மடையா!

சீனு : அப்படியெண்டா என்னடா செய்தனீ!

சந்திரன் : அடேய்! எருமை மாட்டுக்குப் புறந்தவனே நான் சொல்றத கேளு! முதிரக்கண்டடி ஏத்தத்துக்கு போறதுக்கு முன்னாலே மட்டக்களப்புக்குப் போற பதுளை வஸ் வந்திட்டுது. நான்தான் வஸ்ஸ நிப்பாட்டி ரீச்சர ஏத்திவிட்டன்!

சீனு : அப்பிடியா சரி சரி! உன்னட்ட சும்மா கேட்டுப் பாத்தனான்!

சந்திரன் : வேற ஒண்டுமில்லியே!

சீனு : அதுசரி! இப்ப உன்ர தலைமுடியெல்லாத்தையும் ஸ்டைலா மாத்திறியே!

சந்திரன் : உன்ன மாதிரி பறட்டைத் தலைபோல வச்சிரிக்க சொல்றியா!

சீனு : நான் கேட்டதுக்கு மறுமொழி சொல்லன்!

சந்திரன் : நான் சசி ரீச்சர, இனியும் சைக்கிள்ல ஏத்திற்றுப் போக வேணுமெண்டால், கொஞ்சம் வடிவாத்தானே நானிரிக்கோணும்!

சீனு : அப்பிடியெண்டால், இனிமேலும் நீ சைக்கிள்ள ரீச்சர ஏத்தப் போறியா!

சந்திரன் : அவ கேட்டா நான் கட்டாயமாக ஏத்திக்கொண்டுதான் போவன்!

சீனு : சந்திரன்! இது சரியில்ல! இனிமேல் அப்படிச் செய்யாத! நடக்கூடாதது நடந்திட்டா!

சந்திரன் : என்ன ரீச்சர, விழுத்தாட்டிப் போடுவன் எண்டு பயப்படுறியா!

சீனு : இல்லல்ல விழுத்தாட்றதில்ல!

சந்திரன் : அப்ப!

சீனு : இல்ல நீ ரீச்சர முன்னால ஏத்தப்படாது

சந்திரன் : சரி! சரி!

சீனு : புறகு என்னடா ரீச்சரோட கதைச்சிக் கதைச்சிப் போனனீ!

சந்திரன் : என்னத்தக் கதைக்கிற !

சீனு : இல்லல்ல ரீச்சரும், நீயும் என்னவும் கதைச்சிருப்பீங்களே!

சந்திரன் : இஞ்ச வா! அம்மா தயிர் வச்சிருக்காவு கரைச்சுத் தாறன் குடி! கொதிக்கிற உண்ட மனம் நல்லா குளிரும்!

சீனு : சந்திரன் நீ என்னைப் பிழையா விளங்கித்தா!

சந்திரன் : சரி! சரி! இந்தா தயிரக்குடி!
(சந்திரன் சீனுவுக்கு தயிரைக் குடிக்கக் கொடுக்கிறான்.)

(திரை)

## காட்சி - 03

**கதைக்களம் :** பாடசாலையில் அதிபரின் காரியாலயம்

**கதாபாத்திரங்கள்**
: அதிபர், சந்தணம், சசி ஆசிரியை, கடை முதலாளி காளியான்)

**சம்பவம் :** பாடசாலைக்கு சந்திரனின் தாய் சந்தணம் வந்து கவலைப் படுதல். சந்திரனையும், சசி ரீச்சரையும் இணைத்து பாடசாலைச் சுவரில் எழுதிய விடயம் பரபரப்பாயுள்ளது.

சந்தணம் : என்னையா! வரச் சொன்னீங்களாம்!

அதிபர் : நீங்கதான் சந்திரண்ட அம்மா என்ன!

சந்தணம் : ஓமையா! ஆரோ சசி ரீச்சர்ர பேரோட எண்ட மகன் சந்திரண்ட பேரையும் எணச்சி பள்ளிச் சுவரில என்னவோ எழுதியிருக் கானுகளாமே!

அதிபர் : இத நீங்க பெரிசுபடுத்தாம விட்டால் போதும்!

சந்தணம் : அதெப்படி அதிபரையா! எண்ட மகனப் பத்தி எனக்குத் தெரியும்! புறகு குமர் காரியமெலுவாயிது! அண்டைக்கு அந்த ரீச்சர் புள்ளய வஸ்சில்ல எண்டதுக்காகதானே ஏத்திற்றுப் போனவன்!

அதிபர் : அதில தப்பில்லயே! இந்தப் பகுதியில வஸ் தட்டுப்பட்டா, இப்பிடி சிலதுகள், சைக்கிள்ல, மோட்ட சைக்கிள்ல போகுதுகள் தானே!

சந்தணம் : இல்லையா! நீங்க இருந்து பாருங்களன்! ஒரு குமர்ப்புள்ளய

சங்க குறைச்சவனுகள இண்டைக்கு வெள்ளிக்கிழம மயண்டைக்குள்ள முழுகிப் போட்டு காளியம்மாள் சூலத்தில நேத்திக்கடன கட்டுவன்! அவ ஆரெண்டு காட்டுவாவு!

(அப்போது சசி ரீச்சர் வருதல்)

**சசி** : எக்ஸ்கியூஸ் மீ சேர்!

**அதியர்** : வாங்க ரீச்சர்! இவதான் சந்திரண்ட அம்மா!

**சசி** : வணக்கமம்மா!

**சந்தணம்** : என்ன புள்ள! உன்னச் சங்க கொறச்சிப் போட்டானுகள் என்னம்மா! உன்ன பெத்ததுகள் அறிஞ்சா என்ன பாடுபடுங்கள்!

**சசி** : இல்லம்மா! நான் வீட்டாக்களுட்ட எல்லா விசயத்தையும் சொல்லிற்றன்! பிரச்சின ஒண்டுமில்லே!

(அவ்வேளை கடைக்கார முதலாளி காளியான் வருதல்)

**அதியர்** : வாங்க முதலாளி!

**காளியான்** : சந்தண சீனியம்மா இஞ்ச வாறதக் கண்டுதான் வந்தனானையா!

**அதியர்** : ஓம் காளியான்! சந்திரண்ட அம்மா பதறிப்போய் இருக்கிறா!

**சந்தணம்** : பாரன் மகன் காளியான்! இப்பிடிச் செய்து போட்டானே பஞ்சமா பாதகன் அவன ஆரெண்டு அறிஞ்சணெண்டா நான் பொம்பிளயா இரிக்க மாட்டான்.

**காளியான்** : சீனியம்மோவ்! பள்ளிச் சிவரில எழுதின வேற ஆரு! இந்த ஊருக்குள்ள ஒண்டு கிடந்து தலையால தெறிச்சித் திரியுதே அவன் சீனுதான்!

**அதியர்** : நீங்க என்ன சொல்றீங்க காளியான்!

**காளியான்** : சொல்றனே நம்மட அருச்சுனன் கணவதிட ரெட்டபொணையல் மாட்டு வண்டில் முடக்கடி கூளாமரத்துக்கு கீழதானே போடுறவன்!

**அதியர்** : ஓம் காளியான் நானும் பாத்திருக்கன்!

**காளியான்** : அந்த வண்டில் சில்லிட கடையாணிய சீனு கழட்டி எடுத்திருக்கான்!

**சந்தணம்** : புறகு தம்பி

காளியான் : கதையக் கேளன் சீனியம்மா கடையாணில நல்ல கறுத்த பசை அப்பியிருக்குமே!

சந்தணம் : ஓ ! ஓ ! அந்தப் பச கறுத்த மை மாதிரி இருக்குமே!

காளியான் : அதாலதான் சீனு சுவரில எழுதியிருக்கான்

சந்தணம் : ஆரம்பி இதக் கண்டதுகள்!

காளியான் : இவர் புள்ளயர் எழுதிப்போட்டு, பாத்திரிக்காரு கையில நல்லா மசை அப்பித்து

அதிபர் : அப்படி என்ன?

காளியான் : புறகு அதிபரையா! நம்மட கடையில நானுமில்ல! கடையில நிக்கிற பொடியன்ட ஒள்ளுப்பம் லாம்பெண்ண வாங்கி கையக் கழுவித்து ஒரு பேப்பர் துண்டால கையத் துடச்சிருக்கான்!

சந்தணம் : பாருங்கையா! அவண்ட வேலய

காளியான் : ஒள்ளம் பொறன் சீனியம்மா கத முடியல்லியே ! இவன் கையத் துடச்ச பேப்பர கசக்கிப்போட்டு எங்கட வேலிக் கட்டையில இரிக்கிற பொந்துக்குள்ள பூத்தி வச்சிருக்கான்.

சந்தணம் : என்ர காளித்தாயே என்ன சாதி ஆளிவன்

காளியான் : இஞ்ச பாருங்களன்

(காளியான் கறுப்பு மசை துடைத்த கடதாசியை விரித்துக் காட்டுதல்)

அதிபர் : பாருங்க! இந்த பேப்பர்ல அவன்ர கைவிரலடையாளம் எல்லாம் அப்படியே இருக்குதே!

சந்தணம் : நான் இப்ப போறனையா ! அந்த நாய்க்கு என்ன செய்யிறன் எண்டு இருந்து பாருங்க !

காளியான் : சீனியம்மோ ஏன் நீ அவசரப்படுறா ! எல்லாத்தையும் அந்த காளியம்மாள் பாப்பாவு ! இந்தா வெளிச்சிப் போச்சு !

சசி : நீங்க ஆத்திரப்படாதீங்க !

சந்தணம் : என்ன புள்ள நீ சொல்றா ராவு எண்ட புள்ள ஒரு புடிச் சோறுக் தின்னாம படுத்தவன் தலக்கோழி கூவக்குள்ளையும் அவன் விம்மி விம்மி குழந்தப்புள்ளையைப் போல் கொளர்ற சத்தம் எனக்கு கேட்டுது மனே

சசி : சரியம்மா ! நானும் பிறின்சிபல் சேரும் ஸ்கூல் முடிஞ்சதுமே உங்கட வீட்டுக்கு வாறம் நீங்க கவலைப்படாம போங்க!

(திரை)

## காட்சி - 04

**கதைக்களம் :** சசி ரீச்சருடன் அதே பாடசாலையில் படிப்பிக்கும் கலா ரீச்சரின் வீடு

**கதாபாத்திரங்கள் :** கலா, சசி

**சம்பவம் :** அன்று ஞாயிறு விடுமுறை தினம் அடுத்த வாரத்துக்குரிய பாட ஆயத்தம், நோட்ஸ் ஒவ் லெசன்ஸ் இவைகளை எழுதி ஆய்தப்படுத்திவிட்டு கலா ரீச்சர் இருக்கையில், செல்போனில் கோள் வருகிறது.

*(கலா போணில்)*

கலா : குட்ஈவினிங் சசி இப்பதான் நான் நோட்ஸ் ஒப் லெஸண்ஸ் எல்லாம் றெடி பண்ணிற்று, உனக்கு எடுக்க நினைச்சனான், அதுக்குள்ள நீ எடுத்திற்றா! என்ன புதிசா வேற பிரச்சின ஒண்டுமில்லியே ..! ஆ ! சரி ! சரி ! வாவன் பிறியாத்தான் இருக்கிறன்

*(கலா, அங்கிருந்த சில புத்தகங்களை எடுத்து அடுக்கி வைத்தல்)*

*(அவ்வேளை சசி ரீச்சர் வருதல்)*

கலா : வாங்க சசி ! நீ திடீரெண்டு வரப்போறன் எண்டதுமே நான் பயந்திட்டேன். அந்த சீனு வேற என்னவும் பிரச்சினை குடுக்கிறானோவெண்டு !

சசி : சீனுவா அது ஒரு பனிக்கேஸ் !

கலா : இல்ல சசி நாம கவனமாத்தான் இருக்க வேணும் ! அவன் ஒரு முரடன் போல தெரியுது!

சசி : உண்மைதான் கலா ! ஒரு டீஸண்ட் இல்லாதவன்

கலா : சசி இனி நீ டிலே பண்ணாம ஆரோ யூகேயில இருக்கிற வோய, ஆரோ கேட்டதெண்டு சொன்னியே அவன முடியன்.

சசி : கலா ! அத நான் முடிச்சா என்ன நடக்குமெண்டு எனக்கு

இப்பவே ஒரு மாதத்துக்கு முதல் தெரிஞ்சு போயிட்டே!

கலா : நீ என்ன சொல்றா!

சசி : அவனுக்கு யூகேயிலயும் ஒண்டாம், இஞ்ச நானும் முடிச்சா யூகேயிலயும், சிறிலங்காவிலயும் இப்படி சீன் மாறி மாறிப் போகும் !

கலா : சசி ! என்னடி கதைக்கிறா! என்ன சாதி மனுசண்டி அவன்!

சசி : இப்ப, நாம அறியிற பெரும்பாலான நடைமுறை இதுதானே! பாழான கிணத்துக்குள்ள விழ இருந்த நான் தப்பித்தன்.

கலா : சரி சசி ! கடவுள்தான் உன்னக் காப்பாற்றிட்டார் ! இனி உனக்குப் பிரச்சினை இல்லையென்ன!

சசி : இல்ல கலா ! இப்ப எனக்கு ஒரு பிரச்சினை வந்திற்று !

கலா : சொல்லு சசி !

சசி : நம்மட ஸ்கூல் சுவரில என்னையும் சந்திரனையும் சேர்த்து எழுதிட்டானே எழுதின சீனு அவண்ட கையில அப்பியிருந்த கடையாணி மசையை கழுவி அகற்றி இருக்கலாம்

கலா : நீ என்ன சொல்ல வாறா !

சசி : என்ர மனதில் இருந்து சந்திரன எவராலேயும் அகற்ற முடியாது !

கலா : உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிற்று !

சசி : சந்திரன் ஒரு அப்பாவி கலா !

கலா : சசி! அனுதாபத்தில் நீ முடிவு எடுக்கப்போறா போல எனக்குப் படுகுது! சந்திரன் ஒரு படிப்பறிவில்லாதவன்!

சசி : படிப்பறிவு இல்லாட்டியும், பண்பறிவு சந்திரனிட்ட இருக்கு!

கலா : நான் இனி என்னத்தச் சொல்லலாம்! லாஸ்ட் வீக்ல ஏதோ மனவெளிப்பாடு பற்றிய செமினாருக்கு போயிட்டு வந்தாய்

சசி : ஓமோம்! அதில முக்கியமாக அன்புறவு எண்ட ரொப்பிக் பற்றித்தான் நல்லாக செய்தாங்க

கலா : அன்புறவோ !

சசி : ஓம்! அதில திறந்த மனம், நேர்மை, நெருங்கிய பழக்கம் இதெல்லாம் ஒரு முழுமையான அன்புறவு எண்டு சொன்னாங்க !

கலா : வெரிகுட்! இது நம்ம எல்லாரிடமுமிருந்து வெளிப்படுறதுதானே! அப்படியென்டால் ஓபிண்ஹார்ட் முக்கியமென்ன !

சசி : அதுதான் கலா ! நீ சொன்ன ஓபின்ஹார்ட்டோட , ஒளிவு மறைவு எதுவுமில்லாம அதுவும் நிபந்தனையில்லாத அன்போட பழக வேண்டும் கலா !

கலா : இப்படியானவங்க நம்மட சமூகத்தில் எங்க இருக்காங்க எண்டு கண்டு பிடிக்கிற கஷ்டந்தான் ! அப்படியிருந்தா அவங்க மதிக்கப்பட வேண்டியவங்கதான்!

சசி : அப்படிப்பட்ட ஆள்தான் சந்திரன் !

கலா : சந்திரன நீ ஏன் தூக்கிப் பிடிக்கிறாய் ! உன்ர டிசிஸன என்னால் ஏற்றுக்கொள்ற எண்டா எனக்குக் கஷ்டமாகத்தான் இருக்கு சசி ! சந்திரன்ல அப்படி என்னதான் இருக்கு !

சசி : ஒரு குடிகார ஹஸ்பண்டாக இல்லாம வாழ்க்கை தரக்கூடிய குட் கறெக்டர் சந்திரனிட்ட இருக்கு !

கலா : அப்படியா சரி

சசி : பொறின்லயும் கீப்ப வச்சித்து இங்கயும் நாடகமாடக்கூடிய நடிகனில்ல சந்திரன் !

கலா : சரி சொல்லு !

சசி : எல்லாத்தையும் விட ஒரு பொம்பிள அவள்ர பருவ வயதில கட்டின புருஷனிட்ட என்னத்த எதிர்பார்ப்பாள், தண்ணிய போட்டுத்து தூங்கிக்கிடந்தாணெண்டால் நாம எதிர்பார்க்கிற சுகம் கிடைக்குமா என்ன ! மப்ப அடிச்சிட்டு மாப்பிள்ள கிடந்தாரெண்டா நம்மட வெடிங் போட்டோவ வெற்ல பக்கத்தில வச்சித்து படுக்கிற வேலதான் வரும் ! இத எத்தின பொம்பிளயள் வெளியில சொல்லாம நீறு பூத்த நெருப்பாக காலத்தை தள்ராங்க !

கலா : சசி ! சப்டர குளோஸ் பண்ணுவம் !கடையாணி சந்திரனை யும் உன்னையும் சேர்த்தே வச்சித்து! எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்!

**(திரை)**

## குறிப்பு



# நூலாசிரியரைப்பற்றி...

கிழக்கு மாகாணம் கலைப்பெருமை, அதன் உயர்வு, வளர்ச்சி இவைகளுக்கு முன்னுரிமை வழங்கி கலைப்பணி செய்து கொண்டிருக்கும் எம் ஊர்க் கலைஞன் கலைக்கோட்டன் அழகையா இருதயநாதன்.

ஆசிரியராக, அதிபராக மட்டக்களப்பு மாவட்ட சாரணியர் ஆணையாளராக பணியாற்றிய கலைக்கோட்டன் கூத்துக்கலை, மேடைநாடகம், தொலைக்காட்சி நாடகம், சிறுகதை, கவிதை, குறுந்திரைப்படம் என எமது களப்பு மண்ணில் சுமார் 45 வருடங்களுக்கு மேலாக தொய்வின்றி தொடர்ச்சியாக தரமான கலைப்பணி ஆற்றி வருகின்றார். கலாபூசணம், வித்தகர், கொடகே விருது, கலைக்கோட்டன், கலைஞானி, நாடக சிரோண்மணி, தேனக கலைச்சுடர், பாரம்பரியக் கலைஞர் விருது அத்துடன் கடந்த 22.12.2014-ல் இந்தியாவின் தமிழ் சினிமா உலகின் இயக்குநர் இமயம் P. பாரதிராஜா அவர்களாலும் கலைஞர் கௌரவ விருதும் பெற்றுள்ளார்.

எமது களப்பு மண்ணின் கலைப்பெருமைக்கு உணர்வு கொடுத்துக்கொண்டிருப்பவர் எமது மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவராக பின்னர் எமது கல்லூரியிலேயே ஒழுக்க விழுமியங் களுக்குப் பொறுப்பான ஆசிரியராக பணி செய்தவர்.

பின்னர் யுத்த முனைப்புப் பெற்ற காலங்களில் 18 வருடங்களாக மட்டக்களப்பின் படுவான் கரைப் பிரதேசமான கட்டுப்பாடற்றதும், மிக மிக கஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலையில் அதிபராக கடமையாற்றியவர். அவ்வேளைகளில் பல இந்து ஆலயங்களில் திருவிழாக்களின்போது சைவசித்தாந்த நெறிகளை வெளிப்படுத்தும் சைவ புராண நாடகங்கள் பலவற்றை இவர் தயாரித்துள்ளார்.

அன்றும் இன்றும் என்றும் கலைக்காக தம்மை அர்ப்பணித்து வாழும் கலைக்கோட்டன் அவர்களின் "உணர்வுகள்" என்னும் மகுடமிடப்பட்ட நாடகத் தொகுதி வெளியிடப்படுகின்றது. இச்சிறப்பு மிக்க கலைப் பணியினை கல்வி, தகவல், தொழில்நுட்பக்கல்வி, முன்பள்ளிக்கல்வி, விளையாட்டு பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகாரம் புணர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சில் கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கலைஞர்களுக்குரிய காத்திரமான பணி செய்வது பாராட்டத்தக்கதாகும்.

மட்டக்களப்பின் கலை வளங்களுக்குள் இவரது பணி பெருமைக்குரியதே.

**அருட்பணி.போல் சற்குணநாயகம்**
(யேசுசபை) தலைவர்
மட்/புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை
மட்டக்களப்பு, இலங்கை.
26.06.2017.

9 789554 628465

வணசிங்கா பிரிண்டர்ஸ், 496 A, திருமலை வீதி, மட்டக்களப்பு. 065 222 7170